# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு ஆனி மாதம் 26-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 24-ம் இலக்கம்


## பாத்திமா திருசேத்திர யாத்திரை

(சென்றவாரத் தொடர்ச்சி)

### இரத்தஞ்சிந்திய ஒஸ்தி

யாத்திரையை முடித்துக்கொண்டு பாத்திமாவிலிருந்து லிஸ்பன் தலைநகருக்குத் திரும்பும்பிரயாணத்திலே கருத்தாகக் கண்டுகொள்ளக்கூடிய இடங்கள் சில இருக்கின்றன. இவற்றில் ஒன்று பழைய லீறியா பட்டணமாகும். இதுவே மேற்றிராணியாரின் தலைமைஸ்தானமாகும். மற்றொன்று, சான்ராறெம் எனும் பட்டினமாகும். இதன் விசாரணைப்பங்குக் கோவிலிலே இற்றைக்கு அநேகநூற்றாண்டுகளின்முன் அற்புதவிதமாக இரத்தஞ்சிந்திய ஓர் திருஒஸ்தி பூச்சியமாகவைத்துக் காப்பாற்றப்பட்டுவருகிறது. முழுத்திருச்சடங்குடன்கூடிய திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்திலே அது பூசித்து வணங்கப்படும் போது மாத்திரம் அதனைக் கண்டுகொள்ளலாம்.

### போர்த்துக்காலின் தலைநகரம்

பாத்திமா திருசேத்திரத்திலிருந்து லிஸ்பன்நகருக்குத்திரும்பியயாத்திரிகர்கள் நேரம்இருக்குமானால் அங்கு மனதைக்கவரக்கூடியனவாய்க் கண்டுகொள்ளத்தக்க காரியங்கள் இன்னும்அநேகம் இருக்கின்றன. ஆற்றின்பக்மாகஅங்குள்ள அர்ச். ஜெரோனிமஸின்ஆலயமானது அந்தநாளிலே சமுத்திரமார்க்கமாக ஆராய்ச்சியாத்திரை நடாத்திப் பிரஸ்தாபம்பெற்ற வாஸ்கோடாகாமாஎன்ற போர்த்துக்கேயமாலுமிக்குச் சொந்தமான தோலினாற்செய்த 'ஷீல்ட்' எனப்படும் விருதுகவசங்களைக் கொண்டிருக்கிறது. அதிற்தான் அவருடைய கல்லறையும் இருந்துவருகிறது. கப்பற்துறைமுகநீளம் நடந்து செல்லுமிடத்து மனதைவசீகரிக்கும் காட்சிகள்பலவற்றைக்கண்டுகொள்ளலாம். பெண்மணிகள் கூடைகளிலே பெரும்பாரங்களைத்தாபரமில்லாமலே — அதாவது, கரங்களால் பற்றிப்பிடியாமலே தலைமேல் வைத்துச்சுமந்து வெறுங்காலால் நடந்துசெல்வதும், உலகமுழுவதிலுமிருந்துவந்து நங்கூரமிட்டுத் தங்கிநிற்கும்பல்வேறுநாடுகளைச்சேர்ந்த கப்பல்களும், பலவர்ணமுகங்களைக் கொண்ட உள்நாட்டுமரக்கலங்களும், நியூபவுண்ட்லாந்துக்கரைகளுக்குப் பாய்விரித்துப்புறப்படத் தயாராய்நிற்கும் நான்கு பாய்களைக்கொண்ட பாரிய பாய்க்கப்பல்களும், பன்னூற்றுக்கணக்கான உலகப்பிரயாணிகளைக் கொண்ட உல்லாசப்பிரயாணக் கப்பல்களும் கண்ணுக்கினியகாட்சியளிக்கின்றன.

### லிஸ்பன்நகரின் பெருமை

நகரின்புறத்தே "லிஸ்பனின் பெருமை"என்று அழைக்கப்படுகின்ற உதைபந்தாட்டகளம் அமைந்திருக்கின்றது. சுமார் 70,000 காட்சிப்பிரியரை இது அடக்கக்கூடியது. சலவைக்கல் கொண்டுவட்டாகரமாக உயர்ந்த ஆசனங்களைக்கொண்ட நாடகாரங்கம்போன்றமாதிரியாய் இது அமைக்கப்பட்டிருக்கிறது. இதனைஅமைக்கஏறக் குறையப் பத்துலட்சம்பவுண் செலவேற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. நீந்துதற்கென்று போர்த்துக்காலிலே அதிக வளம்பொருந்திய கடற்கரை பலமைல்தூரத்துக்கு இருக்கின்றது. லிஸ்பன்நகரின் எல்லைக்கப்பால் ஒன்றுஅல்லது இரண்டுமைல் தூரத்திலிருந்து நீராடத்தகும் கடற்கரை ஆரம்பமாகின்றது. கடற்கரைநீளமுள்ள அநேகசிறிய பொழுதுபோக்குச் சுகதலங்களுக்குத் தினமும் ஆயிரக்கணக்கானமக்களைத் தீவிர மின்சார றெயின் வண்டிகள் அடிக்கடி ஏற்றிச்சென்று பிரயாணசேவை நடத்திவருகின்றன.

### நரகத்தின்வாயும் உலகத்தின் முடிபும்

இவற்றிலே எஸ்ரோறில்என்பது பிரஸ்தாபமாக அறியப்பட்டது. தன்னகத்திலே பந்தைய விளையாட்டுச் சாதனங்களால் மாத்திரமன்று, ஆனால், சர்வதேசங்களிலும் கீர்த்திபெற்றதனது நடனசாலைகளாலும் இதுபெயர் பெற்றுவிளங்குகின்றது. சற்றே இதற்கப்பால் "போகா தோ இன்பெர்னோ"—அதாவது நரகத்தின் வாய்என்று அழைக்கப்படுகின்ற செங்குத்திலே பயங்கரபிளவொன்று இருக்கின்றது. பலவித பந்தையவிளையாட்டுகளிலும் தோல்வியுற்றுத் தங்களுக்குள்ள எல்லாவற்றையும்இழந்து குட்டிச்சுவராகிறவர்கள் தங்கள் உயிரைமாய்த்துக்கொள்ள இதுதான் வாய்ப்பான இடமெனக் கண்டுகொள்ளுகிறார்கள். அதற்கேற்க இதற்கு அண்மையிலே "பிம் தோ மூந்தோ"—அதாவது உலகத்தின்முடிபுஎன்று அர்த்தமுள்ள ஓர்இராக்'கிளப்' இருந்துவருகிறது.

### போர்த்துக்காலின் அரசியல்வாழ்க்கை

பாத்திமாதிருசேத்திரத்திலும், அதற்குச்செல்லும் வீதிகளிலும், லிஸ்பன்நகரிலும் பல்வேறுகாட்சிகளையும் கண்டுமகிழ்ச்சிகொள்ளுகின்ற தரிசகர்களிலே சிலர் போர்த்துக்காலின் அரசியல் வாழ்க்கைபற்றி ஆச்சரியமடையலாம். 1927-ம்ஆண்டுமுதல் இருந்துவந்ததுபோல அரசாங்க அதிகாரமுழுவதும் டக்றர் சலாஸரின் கையிலேயே இருக்கின்றதுஎன்பது உண்மையே. நாம்அறிந்திருப்பதுபோன்ற அரசியற்கட்சிகள்ஒன்றும் அங்கில்லையென்பதும் உண்மையே. அதிகம்அடிக்கடிநடவாது நடைபெறும் பொதுத்தேர்தல்களிலே டக்றர் சலாஸர்அவர்களுக்குச் சாதகமான அபேட்சகர்கள்மட்டுமே தெரிவுசெய்ய அனுமதிக்கப்படுகின்றார்கள். அதனால் நூற்றுக்குநூறு வீதமும் அவரை ஆதரிக்கும் அபேட்சகர்களே தெரியப்படுகிறார்கள்.

### 17 வருட குரூரஆட்சி

ஆனால், டக்றர் சலாஸர்அவர்கள் பிரதமராக அதிகாரபதவிக்கு வருவதற்குமுந்திய பதினேழு வருடங்களிலும் நடைபெற்ற விநோதகரமான ஜனநாயகஆட்சியின்கீழ் போர்த்துக்கால் அரசியல்சந்தர்ப்பவாதிகளின் விளையாட்டுப்பொருளாய் இருந்துவரலாயிற்று. மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கென்று கோடிக்கணக்கான பவுண்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால், ஆயிரக்கணக்கானபவுண்கள் மாத்திரமே கொடுக்கப்பட்டிருந்தன. ஒன்றின்பின்ஒன்றாக ஆட்சிசெய்துள்ள அநேக அரசாங்கங்களுள் ஒன்றின்காலத்திலே இராசமுடிக்குரிய ஆபரணங்களெல்லாம் மாயமாக மறைந்துபோயின. திருச்சபை பகிரங்கமாகவும், குரூரத்தனமாகவும் துன்புறுத்தப்பட்டது. மேற்றிராணிமார், குருமாரெல்லாம் துரத்தப்பட்டார்கள். அப்போது குருமார் இல்லாமையால்கிறீஸ்துவர்களை ஞானவிசாரணை செய்வதும், அவர்களுக்குத் தேவதிரவியானுமானங்களை வழங்குவதும் இல்லாதொழியவே தேசத்தின் அநேகபகுதிகளில் அஞ்ஞானம் மறுபடியும் தலைகாட்டிக்கொண்டது டக்றர் சலாஸர் ஆட்சிப்பீடத்தில்அமர்ந்தபின் திருத்தத்தின் பெரும்அறிகுறிகள் காணப்படுகின்றன. ஆயினும் பதமையாகவும், படிப்படியாகவுமே.

### தரிசனமாதா மகா தேவாலயம்

பிறேசில் நாட்டைச்சேர்ந்த சாவோபோலா நகரிலே உலகின் இரண்டாவது மிகப்பெரியஆலயமென்று சொல்லப்படுவதான தரிசனமாதா மகாதேவாலயத்தைக் கட்டியெழுப்பும்திருப்பணி ஆரம்பமாகிவிட்டது. ஏறக்குறைய 2,50,000 சதுரஅடி விஸ்தீரணமான நிலத்திலே கட்டியெழுப்பப்படும் இந்தமகாதேவாலயம் 115 அடி குறுக்களவும், 144 அடிஉயரமுமான மத்திய 'கப்பலா'— அதாவது ஸ்தூபி ஒன்றைக் கொண்டிருக்கும். இது 30,000 பேர் தங்கியிருந்து ஆராதனைவழிபாடு நடத்துவதற்குப்போதிய இடவசதியுள்ளது. 60,000 பேருக்குமேல் கொள்ளக்கூடியதான றோமாபுரி, அர்ச். பேதுருவானவர்மகாதேவாலயமேஉலகின்முதலாவது மகாப்பெரிய ஆலயமாகும்.

---

### உருக்குத் தொழிலாளியின் குருபதவி

ஆஸ்திறேலியாவிலே பலறாற் நகர் மேற்றிராணியாரால் அங்குள்ள அர்ச். பத்திரிசியார்கல்லூரிச் சிற்றாலயத்திலே சமீபத்தில் வண. ஜுவக்கீம் குஹொல்பிறதர் குருத்துவாபிஷேகஞ்செய்யப்படலாயினர். இவர் தமதுஆரம்ப கல்வியையும், மேல்தரகல்வியையும் கிழக்குஜேர்மனியிலும், மேற்குஜேர்மனியிலும் முடித்து யுத்தத்தின்பின் சிலகாலம் போலாந்திலே ருஷியர்களின்கீழ் மா இயந்திரகாரராக வேலைசெய்து, ஜேர்மனியில் சொற்பகாலம் தங்கியிருந்தபின் 1949-ம் ஆண்டு ஆஸ்திறேலியாசென்று பேர்த்நகரிலுள்ள உருக்குவார்ப்புத் தொழிற்சாலையில் வேலைசெய்துவந்தபின் 1950-ம்ஆண்டு குருமடத்தில் சேர்ந்து, தத்துவசாஸ்திரம் படித்துக் குருப்பட்டம்பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருடன் சலோ

—A. A. N.—

(இது 1925 வருடங்களுக்குமுன் நிகழ்ந்த உண்மைச்சம்பவம்)

அன்று அந்தப் பரந்தநீலவிசும்பு பகலவனின் ஒளியால் பொலிவுற்று விளங்கியது. இதைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது பளிங்குநீரினையுடைய 'சிலோவே' என்னும் அந்தத்தடாகம். அதில் துள்ளிவீழ்ந்துகொண்டிருந்தன பொன்னிறக்கயல்கள். அப்போது சிதறியநீர்த்துளிகள் கதிரவனின்ஒளியிலே வைரங்களாகத் திகழ்ந்துகொண்டிருந்தன.

இத்தடாகத்தையே கண்ணிமையாமல் நோக்கிக்கொண்டிருந்தான் சலோ. அவன்கண்களில்தேங்கிநின்ற இருதுளி கண்ணீர் அவன்கன்னத்தில் உருண்டு கொண்டிருந்தன. இருதினங்களுக்கு முன் நிகழ்ந்த அந்தச்சம்பவத்தை — ஆம், அவன் இனிஎன்றுமே மறக்கமுடியாத அந்தச்சம்பவத்தை — அந்தத் தடாகம் அவன்கண்களின்முன் கொண்டுவந்து நிறுத்தியது.

ஆம், இருதினங்களுக்குமுன் சலோவின் இதயத்திலே மகிழ்ச்சிபொங்கவில்லை. பசும்புற்றரையிலே படுத்து உறங்கியிருக்கிறான் அவன். ஆனால், அதன் அழகினை அவன் காணமுடியாது. துள்ளியோடும் புள்ளிமான்களை ஒருபோதும்அவன் பார்த்ததுகிடையாது. கதிரவன் வான்வெளியில் உலாவும் காட்சி, விடிவெள்ளியின் புன்னகை, விண்மீன்களின் வியக்கத்தகு எண்ணிக்கை, தண்ணொளிபரப்பும் வெண்ணிலா — இவற்றைப்பற்றிப் பிறர் அழகாகப் பேசுவதை அவன் கேட்டிருக்கிறான். ஆனால், பார்த்ததில்லை. ஆம், இவைகள் அவனுக்கு மட்டும் விதிவிலக்கு. ஏனெனில், அவன் குருடன். குருடனாகவே பிறந்தான். உலகம் அவனைப் பரிகசித்தது. அன்று அவன்தந்தை கடற்கரையிலே கடலையும், அதன் அலையையும்பற்றிக் கூறியபோது அவன்ஏன் அழவேண்டும்? கண்களற்றதன்னைத் துள்ளியெழுந்த கடலலைகள் எள்ளிநகையாடுவதாக எண்ணிக்கொண்டானோ என்னவோ! அவனது குருட்டுக்கண்கள் கண்ணீரைஉகுத்தன. அந்தக்கண்ணீர் கடற்தண்ணீரோடுகலந்து நின்றது அவனுக்கு எப்படித்தெரியும்?

அன்று சலோ பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான்; கண்ணில்லாதஅவனுக்குப் பிழைக்க வேறுவழி!

அப்போது 'சலோ' என்று மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்துஓடிவந்தான் அவன் நண்பன் சீமா. சீமா அன்றுமுடவன். இன்று கிறீஸ்துநாதரால் குணமாக்கப்பட்டவன். சீமா சலோவிடம் கிறீஸ்துவைப்பற்றிக் கூறினன். அவர் தன்னைக்குணமாக்கிய செய்தியையும் தெரிவித்தான். அடுத்தவினடியே தன் பெற்றோரைக்காண ஓடிவிட்டான்.

சலோ இப்போது சிந்திக்கத்தொடங்கினன். சீமாவைக்குணமாக்கியகிறீஸ்து ஏன் அவனையும் குணமாக்கமுடியாது? "அவர் யார்? ஒருவேளை பெரியதீர்க்கதரிசியோ! சரி, அவர் இப்போது எங்கே? சீமா இதைஎன்னிடம் சொல்லுவதற்கு முன்பே ஓடிவிட்டானே! நான் கிறீஸ்துவை உடனேகாணவேண்டும். சிறிதுதாமதித்தால் அவர் ஒருவேளை இந்தஊரைவிட்டு வேறொரு ஊருக்குச் சென்றுவிட்டால் ......!" அவன்உடல் நடுங்கியது. "கிறீஸ்துவே! உம்மை எப்படிக்காண்பேன்? என்மேல் இரக்கமாயிரும் ........ கிறீஸ்துவே உமதுஅருளை எனக்கும் அளித்தருளும் ......"

அதேநேரத்தில் தன்மீது ஓர்அன்புக்கை படுவதாக உணர்ந்தான் சலோ. அதைத்தொடர்ந்து அங்குவந்தவர் மண்ணைத் தமதுஉமிழ்நீரால் சேறாக்கினர். அந்தச்சேற்றைச் சலோவின் கண்களிலே தடவினர். "நீ போய் 'சிலோவே' என்னும் தடாகத்தில் கழுவு" என்று அதிகாரத்தோடு பேசினர் வந்தவர். அதிலே அன்பு தெறித்துக்கொண்டிருந்தது.

தடாகத்திலே கண்களைக்கழுவினன் சலோ. தன்முன்பாகஇருந்த பரந்த நிலப்பரப்பை இப்போதுதான் முதல் தடவையாகக் கண்டான். அவன் இப்போது குருடன்அல்ல. தண்ணீரிலே தன்முகத்தைப் பார்த்தான் ஆம், அவனின் இருவிழிகளும் அங்கே ஒளிபெற்று விளங்கிக்கொண்டிருந்தன. தனக்குப் பார்வையளித்த கிறீஸ்துவை அவன் இதயம் புகழ்ந்துகொண்டிருந்தது. நன்றியிலே மிதந்துகொண்டிருந்தது.

குருடன்சலோ இன்றுபார்க்கிறான். உலகம் வியந்தது. கிறீஸ்துவைப் போற்றியது நல்லவர்குழாம்.

அங்குள்ளோர் அன்று பரிசேயரின் ஆதிக்கத்தில் அடங்கியிருந்தவர்கள். பரிசேயர்எனப்படும் இந்தவகுப்பார் அன்று மதத்திற்குத் தலைவர்கள். இவர்கள் கிறீஸ்துவைப் பகைத்தனர். இவர்களின் பொறாமைநிறைந்த உள்ளம் கிறீஸ்துவின்புகழை எப்படி ஏற்கமுடியும்?

அத்தகைய பரிசேயரின்முன் நின்றான் சலோ.

"நீ பார்வையடைந்தது எப்படி?"

நடந்ததைநவின்றான் அவன். இதை அவர்கள் நம்பவில்லை. நம்பவிரும்பவுமில்லை.

சலோவின் பெற்றோர் விசாரிக்கப்பட்டனர்.

"சலோ உண்மையில் பிறவிக்குருடனா?"

'ஆம்' என்றபதில் அவர்களைத் திகைக்கவைத்தது.

"பின் எப்படி இப்போது பார்க்கிறான்?"

கிறீஸ்து அவனுக்குப் பார்வையளித்தார்என்று அவர்கள் அறிவார்கள். ஆனால், இதைக்கூறினல் பரிசேயரின் பகைக்கு ஆளாகவேண்டுமே. ஆதலால், "எங்களுக்குத்தெரியாது; அவனையே கேளுங்கள்; அவன்சிறுகுழந்தையல்ல; அவனுக்குப்பேசத்தெரியும்" என்றனர்.

பரிசேயர் கிறீஸ்துவைக் குற்றமுள்ளவர் என்றனர்.

சலோ இப்போது துணிவுடன் பேசினன். அவன்வார்த்தைகளில் உண்மையும், உறுதியும் விளையாடிக்கொண்டிருந்தன. "கிறீஸ்துவை நீங்கள் குற்றமுள்ளவர் என்கிறீர்கள். அதைப்பற்றி எனக்கொன்றுந் தெரியாது. நான் அன்று குருடன். இன்று அவர் அருளால் காண்கிறேன் ......"

பரிசேயரின் இதயத்தைச் சுட்டுப் பொசுக்கிக்கொண்டிருந்தன இவ்வார்த்தைகள்.


"எப்படிக் கிறீஸ்து உன்னைக்குணப்படுத்தினர்?" என்று மறுபடியும் வினவினர்.

"ஏன் மறுபடியும் அதேகேள்வி? சற்றுமுன் விடையளித்தேனே." கண்களை அகலவிரித்துப் பரிசேயரைப் பார்த்தான் சலோ. "ஏன் ஒருவேளை நீங்கள் கிறீஸ்துவின் சீஷர்களாக விருக்கின்றீர்களோ?" அவன்வதனத்திலே ஏளனப்புன்னகை தோன்றி மறைந்தது.

பரிசேயரின் முகங்கள் கோபத்தால் சிவந்தன. "முட்டாள்! நீயே அவனுடைய சீஷனயிரு ......... நாங்கள் மோயீசனின் சீஷர்களாகயிருப்போம் ...... கிறீஸ்து எங்கிருந்து வந்தார்என்பது எங்களுக்குத் தெரியாது......"

இடைமறித்துப்பேசினன் சலோ. "தெரியாது! புரியாதபுதிர்! சரித்திர ஏட்டைப் புரட்டிப்பாருங்கள்! பிறவிக்குருடன் பார்வையடைந்ததாக ஓர்வரி காட்டமுடியுமா? கிறீஸ்து சர்வேசுர

(தொடர்ச்சி [illegible]-ம் பக்கம்)



# பல தேசங்களில்

### கம்யூனிஸ்தர்களின் நவீனதந்திரம்

1956-ம்ஆண்டு ஹங்கேரியில்எழுந்த சுதந்திரஎழுச்சிக் கலகத்தின்பின்னர் அந்நாட்டிலிருந்துதப்பியோடியசுதந்திரபோராட்டவீரர்கள் எண்மர் சமீபத்தில் இங்கிலாந்திலே பர்மிங்காம் நகரில் நிகழ்ந்தகூட்டம்ஒன்றிலே சுதந்திரஎழுச்சிக் கலகத்தின்முன்னும், அதன்பின்னுமாக ஹங்கேரியின்நிலைமைகளைப்பற்றி எடுத்துக்கூறினர்கள். இந்த எட்டுப்பேருள்ளும் ஒருவர் ஓர் இளம்வாலிபர். கம்யூனிஸ்தருக்கு மாறான துண்டுப்பிரசுரங்களைப் பரப்பியதற்காக மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தவர். ஆனல், பிந்தச்சுதந்திரபோராட்டவீரர்களால் விடுதலையாக்கப்பட்டவர். இந்தவாலிபர் கூறியதுவருமாறு: "மரணதண்டனை விதிக்கப்பட்ட ஓர்மனிதரைத் தூக்கிவிடுவதற்காக அவருடைய சிறைச்சாலைச்சிற்றறையிலிருந்து கொண்டுசெல்வதும், பின்னர் அவருக்குவிதிக்கப்பட்டுள்ளமரணதண்டனை பின்போடப்பட்டிருப்பதாகக் கடைசிநிமிஷத்தில் அவருக்குச்சொல்வதும் ஹங்கேரியில் ஓர்சாதாரண வழக்கமாகிவிட்டது. இவ்வாறு செய்வதாலே இளம்வாலிபர்கள் சிலமாதங்களில் அதிகம்வயது சென்றவர்களாக ஆக்கிவிடப்படுகிறார்கள். நான் சிறைவைக்கப்பட்டிருந்த ஆறுமாதங்களிலும் 20-க்கும், 25பேருக்குமிடைப்பட்ட கைதிகள் தினமும் சிறைச்சாலையிலே தூக்கிலிடப்பட்டார்கள்."

● போர்த்துக்காலின் பிரதமராக டக்றர் சலாசர் அவர்கள் நியமனஞ் செய்யப்பெற்ற 30-ம் ஆண்டு நிறைவுதினம் சமீபத்தில் வந்தபோது, அதன் ஞாபகார்த்தமாக லிஸ்பன் தலைநகரிலுள்ள பாத்திமாநாயகியின் கோவிலில் நடைபெற்ற தேவதோத்திர பாடற்பூசைக்கு மந்திரிமார்களும், மற்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும், அவர்களின் மனைவியர்களும் சமுகமளித்திருந்தார்கள்.

● அணுச்சக்திகொண்டு இயக்கப்படும் "ஸ்கேற்" என்ற அமெரிக்க புதியசப்மறின் சமீபத்திலே அத்திலாந்திக் சமுத்திரத்தை 203 மணித்தியாலத்தில் — அதாவது, 8 நாள் 11 மணித்தியாலத்தில்கடந்து சப்மறின் பிரயாணத்திலே ஓர்புதியதீவிர வேகசாதனையை நிலைநாட்டியிருக்கின்றது. இந்த முழுப்பிரயாணத்தையும் அது சமுத்திரத்தின்மேல் மிதவாது நடத்தியிருக்கின்றது.

● பிரித்தானியதேச றெஜிஸ்திரார் ஜெனறலாகத் திரு. எற்வாட் மைக்கேல் பேர்த் எனும் கத்தோலிக்க பிரமுகர் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இவர் பலவருடங்களுக்குமுன் புரொட்டஸ்தாந்த சமயத்திலிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்கரானவர். 1947-ம் ஆண்டுமுதல் பிரித்தானிய சுகாதாரமந்திரி காரியாலயத்திலே உபமந்திரியாய் இருந்துவந்தவர்.

● பிறசெல்ஸ்நகரில் நடந்தேறுகின்ற சர்வதேச பொருட்காட்சியிலே "தேவனின்நகரம்" என்ற வத்திக்கான் காட்சிமண்டபமானது நற்கருணைச் சிற்றாலயம் ஒன்றையும், மற்றும் அதிகஞ்சிறிய ஆறுசிற்றாலயங்களையும் அடக்கியுள்ளது. இவற்றிலே காட்சிதிறந்துவைக்கப்பட்டிருக்கும்நேரத்தில் கத்தோலிக்கர்சென்று ஆராதனைவழிபாடு நடத்திவருகின்றார்கள். குருமார் இருபதுக்குமேற்பட்ட பாஷைகளிலே பாவசங்கீர்த்தனம் கேட்டுவருகின்றார்கள்.

● கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள யூகோசிலேவியாவிலே சாகிறெப்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்ரிபினக் ஆண்டவர் கடினநோய்கண்டு வருந்துகிறாரெனச் செய்தி கிடைத்திருக்கிறது. அவர் வலதுகாலிலுள்ள இரத்தநாளங்கள் பாதிக்கப்பட்டும், சரீரமுழுவதும் இரத்தவோட்டம் பாதிக்கப்பட்டும் வருந்துவதாக றோமைநகரிலிருந்தும், பெல்கிறேட் நகரிலிருந்தும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

● இத்தாலியிலே கத்தோலிக்கர் அல்லாதவர்களாய் 1,20,000 பேர் இருந்துவருகிறார்களென்றும், இவர்கள் 48 பல்வேறு புரொட்டஸ்தாந்த சபைகளைச் சேர்ந்தவர்களென்றும் இத்தாலிய உள்நாட்டுமந்திரி காரியாலயம் தெரிவித்திருக்கிறது இன்னும் அத்தேசத்திலே பிறநாடுகளைச்சேர்ந்த 495 பாதிரிமாரும், இத்தாலியரான 273 பாதிரிமாரும், 160 புரொட்டஸ்தாந்த கோவில்களும் இருந்துவருவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

● பிறேசில்நாட்டிலே சஞ்சரித்துவருகின்ற இரண்டாவது தலைமுறையான ஜப்பானியர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் இன்று கத்தோலிக்கராய் இருக்கின்றார்கள். அந்நாட்டிலே மொத்தமாகவசிக்கின்ற நான்கு லட்சம் ஜப்பானியர்களில் இரண்டரை லட்சம்பேரும் கத்தோலிக்கரே. பிந்திய புள்ளிவிபரப்படி ஜப்பானிலுள்ள கத்தோலிக்கர் 2 லட்சத்து 27 பேர் மாத்திரமே.

● பாப்பரசரின் நாமதேயத்தைக் கொண்ட குஷ்டரோக வைத்தியசாலை ஒன்று சென்னையிலே சமீபத்தில் சேலம்நகருக்குச்சமீபமாகத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. தமது 80-வது பிறந்தபெருநாளின்போது பரிசுத்த பிதா காண்பித்த விருப்பின்பேரிலே இந்தஸ்தாபனம் இருவருடங்களின்முன் ஆரம்பமாகி, இப்போது ஓர்வைத்தியசாலையாகியிருக்கிறது. தற்சமயம் இது 1,400 குஷ்டரோகருக்குச் சிகிச்சையளித்துவருகிறது.

● பிறசெல்ஸ்நகர உலகபொருட்காட்சியிலே வத்திக்கான் காட்சிமண்டபத்தில் சிற்றாலயங்களுக்கு வெளியே உள்ளபகுதியானது பல சிறு பகுதிகளாகவகுக்கப்பட்டு, அவற்றிலொன்று பாப்பரசுடன்சம்பந்தப்பட்ட காட்சிப்பொருட்களைக் கொண்டிருக்கிறது. இதற்குமேலாகத் தமதுகரங்களை நீட்டியபடியே நிமிர்ந்தநிலையாய்ச் சிலுவைவடிவமாகநிற்கும் பாப்பரசரின் சிலையொன்று நிறுவிநிற்கின்றது.

---

## பரிசுத்த செபமாலைமாதா திருநாள்

### கொழும்புத்துறை

கொழும்புத்துறை, பரிசுத்தசெபமாலைமாதாவின்கோவிலில் அடுத்து நிகழும் ஆடிமாதம் 2-ந்திகதி புதன் கிழமை மடுமாதா திருநாளன்று செபமாலைமாதா திருநாள் கொண்டாடப்படும். முதல்நாளாகிய 1-ந்திகதி செவ்வாய்க்கிழமை மாலை வேஸ்பர்பாடப்படும். 2-ந்திகதி புதன் கிழமைகாலை பெரியபாடற்பூசை நிறைவேறும்.

எ. லெபோன், O. M. I.
கட்டளைக்குரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரேகுடும்பத்தில் ஆறுபேர்

தொமினிக்கன்சபைக் குருமாராகச் சமீபத்திலே அபிஷேகஞ் செய்யப்பெற்ற இருஉடன்பிறந்த சகோதரர்களான வண. கார்லோஸ் ஸபால்தா, வண. ஜூவக்கீம் ஸபால்தா எனும் குருப்பிரசாதிகள் இருவரும் ஸ்பானியதேச பம்பலோனுநகரிலே தங்கள்முதற் பூசையை நிறைவேற்றியபோது பரிசுத்தபாப்பரசரும், தொமினிக்கன்சபை அதிசிரேஷ்டரான மைக்கேல் பிறவுண்சுவாமியாரும் அவர்களுக்குச் சோபனவாழ்த்துத்தந்திகள் அனுப்பிவைத்தார்கள். இவ்விதம் வாழ்த்துச்செய்திகள் அனுப்பிவைக்கப்படக் காரணம், ஸபால்தாகுடும்பம் தொமினிக்கன்சபைக்கு இவர்களுடன் ஆறுபேரைக் கொடுத்திருப்பதேயாகும். தொமினிக்கன்சபையைச் சேர்ந்த ஏனையநான்கு சகோதரர்களிலும் இருவர் குருமாராயிருக்கின்றனர். மற்றொருவர் வேதசாஸ்திரம்பயிலும் குருத்துவமாணவராயும், இன்னொருவர் தொமினிக்கன்சபையிலே ஓர்தவசந்நியாசியாகவும் இருந்துவருகின்றார்கள்.

# 860 திருப்பண்டங்களைக் கொண்டுள்ளகுருமடத்தின்பெருமை

பிரித்தானியிலே டேறம்நகரிலுள்ள உஷோகல்லூரியெனப் பிரஸ்தாபமாக அறியப்படுகின்ற பெரியகுருமடம் ஸ்தாபகமான 150-ம்ஆண்டு நிறைவுவிழா வருகிறஆடிமாதம் 20-ந்திகதிஞாயிறுவாரம் கொண்டாடப்படவிருக்கிறது. தற்போது 380 மாணவர்களைக்கொண்டுள்ள இந்தக்கல்லூரி நிலைபெற்றிருந்த 150வருடங்களிலும் 3,000 குருமாருக்குமேல் பயிற்றியிருக்கின்றது. இவர்களில் ஐந்துகருதினால்மாரும், அநேக அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரும் அடங்குவார்கள். லண்டன்நகரிலே வெஸ்ற்மினிஸ்றரின் ஏழு அதிமேற்றிராணிமாரிலும் நால்வரும், லிவர்ப்பூல்நகரின் தற்போதைய ஹீனன்அதிமேற்றிராணியாரும், வெஸ்ற்மினிஸ்றரின் தற்போதைய கொட்பிறி அதிமேற்றிராணியாரும் இக்கல்லூரிப் பழையமாணவர்கள். இந்தக் கல்லூரியின் மற்றோர்விசேஷம் யாதெனில், அதன்திருக்குடும்பசிற்றாலயம் 860 திருப்பண்டங்களை அடக்கியிருப்பதே. இவற்றில் திவ்வியகர்த்தரினதும், தேவதாயாரினதும், மற்றும் அநேக அர்ச்சியசிட்டர்களினதும் திருப்பண்டங்கள் அடங்கியுள்ளன. இற்றைக்கு நூறுவருடங்களின் முன் உண்மையானதிருச்சிலுவையின் ஆறுதுண்டுகள் உட்படச் சுமார் 860 திருப்பண்டங்கள் ரோமாபுரியிலிருந்து இந்தக்கல்லூரிக்கு அனுப்பிவைக்கப்படலாயின. இன்னும் திருமுள்முடியிலிருந்த இருமுட்களும், ஆண்டவரைஅடித்த கசையின் — அதாவது கயிற்றின் ஓர்துண்டும், அவரின் திருக்கரங்களைக்கட்டியகயிற்றின் ஓர்துண்டும் அதன்சிற்றாலயத்தில் இருந்துவருகின்றன. பொதுவிலே இந்தக்கல்லூரி அநேகமேதாவிகளைப் பிறப்பித்திருக்கின்றது. அவர்களில் ஓர்காலம் அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்படுவாரென எதிர்பார்க்கப்படுகின்ற கருதினால் மெறிடெல்லால்ஆண்டவரும் ஒருவராவார்.

—(⌒)—

## ஹங்கேரியிலே கம்யூனிஸ்தரின் பழையவேஷம்

இரும்புத்திரைக்குப் பின்னால் திருச்சபையின்நிலைமை மிகமோசமாகிக்கொண்டு வருவதாகக் காணப்படுகிறது. ருஷியபிரதமர் குருசேவ் விஜயஞ்செய்ததிலிருந்து ஹங்கேரியிலே கருமங்கள் மேலும் இறுகிக்கொண்டுவருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கருதினால் மின்ட்சென்ரி ஆண்டவர் இன்னுமே அமெரிக்க தூதுவராலயதில் இருந்துவருகின்றார். அவர் இந்தப்பலவந்தமான இளைப்பாற்றியில் இருந்துகொண்டு தமதுசெல்வாக்கைச் செலுத்துகிறாரென்று ஹங்கேரிய கம்யூனிஸ்தஅரசாங்கம் சிந்தித்துக் களைகொண்டுவருவது பிரத்தியட்சமாகப் புலப்படுகின்றது. அதனால் கருதினால்ஆண்டவருக்கு விசுவாசபிரமாணிக்கமாய் இருந்துவருகின்ற குருமாரையெல்லாம் அங்கீகரியாதுவிடுமாறு ஹங்கேரியமந்திரிகளில் ஒருவரான திரு. கலாய்என்பார் மேற்றிராணிமாரைக் கேட்டுக்கொண்டார். ஆனால், இது ஓர்கஷ்டமானசெயலாகும். ஏனெனில், மேற்றிராணிமாரே கருதினால் ஆண்டவருக்கு அமைச்சலுள்ளவர்களாயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். 1956-ம் ஆண்டு நடைபெற்ற ஹங்கேரிய சுதந்திரஎழுச்சிக் கலகத்தின்போது, அந்நாட்டின் பிரதமரான காதரதுகலங்கிக்கொண்டிருந்தஅரசாங்கம் திருச்சபைமட்டில் இனிமேல் சாதகமான மனப்பான்மை காண்பிக்கப்போவதாக அறிக்கைகள் வெளியிட்டது. ஆனால், சோவியற்படைகளின் துணையைப்பெற்றுக்கலகம்அடக்கப்பட்டுஅரசாங்கம்வலுப்பெற்றதும் தனதுபழைய வேதவிரோதவேஷம்போட்டு அதை ஆட்டிவைக்க முனைந்திருக்கிறது.

# ருஷிய பீரங்கிப்படை வீரர் இன்று ஓர்குருவானவர்

சோவியற்அரசின் செஞ்சேனையிலே முன்னர் ஓர்பீரங்கிப்படைவீரராய் இருந்தவரும், ருஷியபிரிவினைச்சபையிலிருந்து மனந்திரும்பியவருமான ஒருவர் தற்போது லண்டன்நகரிலே ருஷியதேசாந்திரிகளுக்கென இருந்துவருகின்ற சிறியகோவில்ஒன்றில் ஓர்கத்தோலிக்ககுருவாய் இருந்துவருகின்றார். 39 வயதுடையவரும், வண. கொன்ஸ்ரன்ரின் மாஸ்காலிக் சுவாமியாரென அறியப்படுகிறவருமானஇவர் அப்போது பையிலேறஷியா (வெள்ளைருஷியா) எனுமிடத்திலுள்ள தம்முடைய தந்தையாரின் கமத்தில் வேலைசெய்துகொண்டிருக்கும்போது சோவியற்செஞ்சேனையிலே பலவந்தமாகச் சேர்க்கப்பட்டார். ருஷியபிரிவினைச்சபையிலே பக்திவேகமுள்ள ஓர்கிறீஸ்துவரானஇவர் பட்டாளத்தில் சேவைசெய்யும்போது தமதுதோழர்களான உடன்போர்வீரர்களின் பரிகாசங்கள், இழிமொழிகள், அவமதிப்புகளைப் பறுவாய்பண்ணாது தமதுசெபங்களைத் தொடர்ந்து பயபக்தியுடன் செய்துவந்தார். ஈற்றில் அவர்கள்மத்தியிலே செபஆராதனைகளைத் தொடக்கிநடத்திய காரணமாகத் தொழிற்பட்டாளம்ஒன்றுக்கும், கடைசியாக ஓர்போலிஷ்செஞ்சேனைக்கும்மாற்றப்பட்டு, அநேககஷ்டங்கள் அனுபவித்தபின் ரோமைநகருக்கு வழிபிடித்துச்சென்று அங்குசிலகாலத்தின்பின் மனந்திரும்பிக் கத்தோலிக்கராயினர். அதன்மேல் கிறகோரியாரின் சர்வகலாசாலையில் குருப்பட்டத்துக்குப் படித்துக் குருப்பட்டம் பெற்றுக்கொண்டார். தற்போது வண. மாஸ்காலிக்சுவாமியார் லண்டன்நகரில் இருந்துவருகின்ற பயிலோருஷியர்கள்குடியேறியிருக்கும்பகுதியிலுள்ள சிறியகோவில்ஒன்றில் அவர்களை ஞானவிசாரணைசெய்து, அவர்களின்சேமவாழ்வுக்காக உழைத்துவருகின்றார். இந்தக் கோவிலில்நடைபெறும் ஆராதனைவழிபாடுகளில் அங்குள்ள ருஷியபிரிவினைச்சபைக் கிறீஸ்துவர்களும் கலந்துகொள்ளுகிறார்கள்.

—(⌒)—

## உக்ரேய்னிய கத்தோலிக்கரும் வெளிநாடுகளும்

இரும்புத்திரைக்குப் பின்னாலுள்ள நாடுகளில்ஒன்றான உக்றேய்ன்நாட்டிலே கம்யூனிஸ்தர்கள் கத்தோலிக்கதிருச்சபையைத் துன்புறுத்தி எவ்வளவோதூரம் அதை நிர்மூலஞ்செய்துவிட்டபோதிலும் கனடாவிலும், ஐக்கிய அமெரிக்கதேசத்திலும் உக்றேய்னிய கத்தோலிக்கதிருச்சபை பெருந்தொகையான கத்தோலிக்கரைக்கொண்டதாய் நன்குஅணிவகுக்கப்பட்டிருக்கின்றது. கனடாவிலே 540கோவில்களுடனும், மூன்றுலட்சம்பேருக்குமேற்பட்ட விசுவாசிகளுடனுங்கூடிய நான்குஉக்றேய்னிய கத்தோலிக்க மேற்றிராசனங்கள் இருந்துவருகின்றன. ஐக்கிய அமெரிக்கதேசத்திலே ஐந்து உக்றேய்னியமேற்றிராணிமார்களும், 1443 விசாரணைப்பங்குகளும், 5லட்சம்பேருக்குமேற்பட்ட விசுவாசிகளும் இருக்கின்றார்கள். இவ்விருநாடுகளிலும் மாத்திரமல்ல, உலகின் மற்றும்அநேக நாடுகளிலும் உக்றேய்னியகத்தோலிக்கதிருச்சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்திரேலியாவிலும்விரைவிலேஅது ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. கனடாவிலும், ஐக்கிய அமெரிக்கதேசத்திலும், சுதந்திர ஐரோப்பியநாடுகளிலும்உக்றேய்னிய கத்தோலிக்கர் தங்கள்சொந்தக் குருமடங்களை, அநாதசாலைகளை, ஆரம்ப, உயர்தர கலாசாலைகளை, வயோதிபர்சாலைகளை, அநேகசந்நியாசமடங்களைக் கொண்டிருக்கிறார்கள்.

—(⌒)—

# வத்திக்கான் தபால் முத்திரைகள்

லூர்துபதிக்காட்சிகளின் நூற்றாண்டுவிழா ஞாபகார்த்தமாக வத்திக்கான் ஆறுபுதியஇனமான தபால்முத்திரைகளைப் பாவனைக்கு வெளியிட்டுள்ளது. அதிகம் கவர்ச்சிகரமான இவற்றிலே இரண்டுஇனமான முத்திரைகள் தேவதாயாரையும், மசபியேல் கற்பாறையையும், காவ்நதியையும், அதன்கரையிலே மேய்கின்ற செம்மறியாடுகளையும் காண்பிக்கின்றன. மற்றிரண்டுஇனமான முத்திரைகள் தனதுகதிரையில் உட்கார்ந்திருக்கும் ஓர்நோயாளியையும், தூரத்திலே லூர்துநாயகியின் கீர்த்திவாய்ந்த மகாதேவாலயத்தையும் காண்பிக்கின்றன. வேறிரண்டுஇனமான முத்திரைகள் பெர்னதெத்அம்மாள் காட்சியால் ஆனந்தபரவசமுற்றவளாய் ஆற்றின்பக்கமாக முழந்தாட்படியிட்டிருப்பதையும், தூரத்தில்கட்டியெழுப்ப உத்தேசிக்கப்பட்டிருந்த புதியமகாதேவாலயத்தையும் காண்பிக்கின்றன. "லூர்த்து1858—1958" என்பது எல்லா முத்திரைகளிலுமே பொறிக்கப்பட்டுள்ளது. பிறசெல்ஸ்நகரில் பிரஸ்தாபமாகநடைபெற்றுவரும் உலகபொருட்காட்சியின் ஞாபகார்த்தமாகவும் வத்திக்கான் விசேஷதபால்முத்திரைகளைப் பாவனைக்கு வெளியிட்டிருக்கின்றது. இவற்றிலே பாப்பரசரின் பிரதிமையும், வத்திக்கான் காட்சிமண்டபத்தின் பிரதிமையும் காணப்படுகின்றன.

## ஆஸ்திரிய குடும்பங்களின் ஒருநாள் உபவாசம்

ஆஸ்திரியதேச கத்தோலிக்க குடும்பங்கள் சென்ற தபசுகாலத்திலே மேலதிகமாக ஒருநாள்உபவாசமிருந்து அதனால் கோறியாநாட்டுக் கத்தோலிக்கருக்குதவியாக ஏறக்குறைய 40,000 பவுண் சேகரித்திருக்கின்றன. ஆஸ்திரிய பெண்மணிகள்சங்கத்தின் ஆலோசனையைமேற்கொண்டு அத்தேசத்திலுள்ள கத்தோலிக்ககுடும்பங்களெல்லாம் மேலதிகமாகஒருநாள் உபவாசஞ்செய்து, அதன்மூலம் கோறியாவிலேபசிபட்டினியால்வாடும் மக்களுக்கு உதவிசெய்வதற்கான விசேஷநிதிக்கென்று இந்தப்பணத்தை மிச்சப்படுத்திக் கொடுக்கலாயின. இந்தப்பணங்கொண்டு உணவும், மற்றும் சேமவாழ்வுக்கான பொருட்களும் வாங்கிக் கப்பல்மூலம் கோறியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அறிவித்தல்

அர்ச். ஜோண் பொஸ்கோ தமிழ்ப் பாடசாலை சென்ற 1957-ம்ஆண்டின் ஆடிமாதத்தில் அப்போஸ்தலிக்க கார்மேல்சபைக் கன்னியாஸ்திரீமாரால் எடுத்துநடத்தப்படுகிறது. இது ஒருறோமான்கத்தோலிக்க கலவன்பாடசாலையாகும். இதில் பாலர் வகுப்புமுதல் 5-ம்வகுப்புவரை வகுப்புகள்இருக்கின்றன. அடுத்தவருடம் 6-ம்வகுப்பு காலை8—30மணிமுதல் பிற்பகல் 2—20வரை ஆரம்பித்து நடத்தப்படும். வருடத்தில் எந்த நேரமும் மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். இந்தப்பாடசாலை யாழ்ப்பாணம், தல்லாலை, றக்காவீதியிலே அமைந்திருக்கிறது.

சிரேஷ்ட கன்னியாஸ்திரி,
கார்மேல் கன்னிகாமடம்,
யாழ்ப்பாணம்.

## ஆனி மாதம்

பொதுக் கருத்து: இக்கால இன்னல்களிடையே மக்கள் யேசுவின் திருஇருதய நேசத்தில் தங்கள்நம்பிக்கையை வைக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

சத்திய வேத
# பாதுகாவலன்
1958-ம் ஆண்டு
ஆனி மாதம் 26-ந் திகதி

## வினைவிதைத்தவன் எதை அறுப்பான்?

ஹங்கேரியநாட்டின் முன்னைநாள் பிரதமர் இம்றெநாகியும், முன்னைநாள் பாதுகாப்புமந்திரி ஜெனறல் போல் மெலெற்றரும், மற்றும்அவர்களின் சகாக்கள் இருவரும் ஹங்கேரியஅரசாங்கத்தால் தூக்கிலிடப்பட்டார்களெனச் சென்றவாரம் மஸ்கோ வானொலிபரப்பிய திகில்விளைக்கும் படுகொலைச் செய்தியானது அகிலமுழுவதிலுமே பெருங் கவலையை உண்டுபண்ணலாயிற்று. இப்படுகொலைக்குக் காரணமான சோவியற்ருஷியாவைப் பிறவல்லரசுகளும், உலகிலுள்ள நடுநிலைமைநாடுகளும், இடதுசாரிநாடுகள்தானுமே இதுவிஷயமாய் எப்படித்தான் கண்டித்தபோதிலும் அதற்கெல்லாம் ருஷியா செவிசாய்க்கப்போவதேயில்லை. ஏனெனில், இதற்குமுன்னரும் ஸ்ராலின் ருஷியதலைவர்களை ஒருவர்பின்னொருவராகக் கொன்றழித்து வந்தபோது, அவைகளெல்லாம் இன்றுபோலவே வன்மையாகக் கண்டித்தன. ஆனால், கண்டபலன் ஒன்றுமேயில்லை. ஏனெனில், ஸ்ராலின் அதனை லட்சியஞ்செய்யாமல் மேன்மேலும் தனதுஅரசியற்படுகொலைகளை இஷ்டம்போல நடத்திக்கொண்டு வந்ததை உலகம் நன்கறியுமன்றோ!

ருஷியகம்யூனிஸ்த ஏகாதிபத்தியம் தான்வகுத்தகொள்கையை இம்மியளவுதானும் மீறுகிறவர்கள்மேல் அத்துணை கடுமையான நடவடிக்கைஎடுத்துப் படுகொலைபுரியும் பாதகச்செயலை இன்னுமேகைவிடவில்லைஎன்பதும், ஆரம்பத்திலே ஸ்ராலினையும், அவரதுஈனச்செயலையும் சண்டவேகத்துடன் கண்டனஞ்செய்துவந்த குருஷேவ் இன்று அதிகாரபதவியைக் கைப்பற்றிச் சர்வாதிகாரியானதும் ஸ்ராலினின் அரசியற்படுகொலைப் பாதையிலேயே இறங்கியுள்ளார் என்பதும் இப்போது நன்கு புலனாகிவிட்டது. முன்னர் ருஷிய கம்யூனிஸ்த ஆதிக்கத்தில் இருந்துவந்து, பின்னர் அதனைவிட்டுப் பிரிந்த யூகோசிலேவியாவை ருஷியா வெகுவாக அச்சுறுத்தி அதன்மீதுஆக்கிரமிப்புப்பாணம் தொடுத்திருக்கின்ற இச்சந்தர்ப்பத்திலே ஹங்கேரியின் முன்னைநாள்தலைவர்களை அச்சபயமேயில்லாது கழுவேற்றிக் கொலைசெய்திருப்பதிலிருந்து யூகோசிலேவிய அரசாங்கதலைவர் மாஷல் ரிற்றோவின்உயிருக்கும் ஏதேதுஆபத்துஏற்படுமோவென்ற அச்சம்பிறந்திருக்கிறது. அதனால் அவர் இனிமேல் சர்வசாக்கிரதையாய் இருக்கவேண்டுமென்று அமெரிக்கவெளிநாட்டு மந்திரியார் திரு. டல்லஸ் எச்சரித்திருப்பது ஆச்சரியமன்று.

இம்றெநாகிஎன்ற முன்னைநாள் ஹங்கேரியபிரதமர் மாஷல் ரிற்றோவைப்போன்று ஓர்கம்யூனிஸ்தரே. ஆனால், தனதுநாட்டின் சூழ்நிலைக்கேற்பக் கம்யூனிஸ்த கொள்கைகளைச் சுதந்திரமாகக் கையாளவேண்டுமென்ற நோக்கங்கொண்டவர். ருஷியஆட்சிப்பீடத்துக்கு அடிவணங்காது, அதன்கட்டுப்பாட்டுக் கடங்காது தங்கள்நாடு சுதந்திரமாக வாழவேண்டுமென்ற அபிலாஷையுடையவர். இத்தகையலட்சியங்களைமேற்கொண்டே ஹங்கேரிய மக்கள் 1956-ம்ஆண்டு ருஷிய இரும்புப்பிடியிலிருந்து தங்கள் நாட்டினை விடுவிப்பதற்காக அரசியற்புரட்சிசெய்தபோது இம்றெநாகியே ஹங்கேரியபிரதமராய் இருந்தார். அப்போது ருஷியா தனதுஇராணுவபலத்தைக் கொண்டு ஹங்கேரியபுரட்சியை அடக்கியது. இம்றெநாகியையும், அவர் சகாக்களையும் கைதுசெய்ய ஆயத்தப்படுகையில் அவர்கள் அங்குள்ள யூகோசிலேவிய தூதராலயத்திலே சரண் புகுந்துகொண்டார்கள். ருஷிய அதிகாரிகளோ அவர்கள்மீது எத்தகையவிசாரணையும் நடத்தப்படமாட்டாதென யூகோசிலேவியஅரசாங்கத்துக்கு வாக்குறுதியளித்து, அவர்களைவிடுவிக்கச்செய்து பின்னர்நயவஞ்சகமாகக் கைதுசெய்தார்கள். ஈற்றில் பத்தொன்பது மாதங்களின்பின் இன்றுஅவர்கள் தூக்கிவிட்டுக் கொலைசெய்யப்பட்டிருக்கின்றார்கள். இதிலிருந்து சோவியற் அரசின்கொடுங்கோன்மை இன்னும்ஒழியவில்லை; அதன்வாக்குறுதியில் நம்பிக்கைவைக்கஇடமில்லை என்பதும் நன்குபுலப்படுகிறது. இந்தப்பழியெல்லாம்—இந்தஇரத்தப்பழியெல்லாம் சோவியற்அரசைப் பழிவாங்கும் காலம் ஓர்நாள் நிச்சயமாக வந்தேதீரும். அரசன் அன்றறுப்பான்; தெய்வம்நின்றறுக்கும்; ஆனால், ஓர்காலம் ருஷிய, சீனத்தலைவர்களைப்போன்று மற்றவர்களைக் "களையெடுத்து" எத்தனையோபேரைக் கொலைக்களத்துக்கு அனுப்பிய இம்றெநாகி இன்று அதேகளையெடுப்புக்குப் பலியாகியிருக்கின்றார். ஆமாம், வினைவிதைத்தவன் எதைஅறுப்பான்?

# திவ்விய மீட்பரின் திருக் குருதி

—: P. N. :—

பிதாவின் நித்தியமகிமையானவரும், பிதாச்சருவேசுரனுடனும், தூய ஆவியான சருவேசுரனுடனும் ஒரே சுபாவமுடையவராய் இராச்சியபாரம் செய்கிறவருமாகிய யேசுஇரட்சாபெருமானின் திருஉதிரம் அளவில்லாத விலையேறப்பெற்றதாகும். சகல தூதாதிதூதர்களும், சகலசம்மனசுகளுமே சேர்ந்தாலும் பாவத்தால் தேவனுக்கு நேர்ந்த அணைகடந்தஅவமானத்தைப் போக்க, ஒரேயொரு சாவானபாவத்துக்கு ஈடானஉத்தரிப்பைத் தேவனுக்குச் செலுத்தக் கூடியவர்களல்ல. பூமியிலேபிறக்கின்றஒவ்வொருஆத்துமமும்உலகத்திலுள்ள—உண்டாயிருக்கக்கூடிய சகலதுன்பதுரிதங்களையும் முடிவில்லாத ஊழியுள்ளகாலமாகத்தான் பட்டனுபவித்துக்கொண்டு வந்தாலும் ஒரேசாவானபாவத்துக்குத் தானும் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளமுடியாது. ஆகவே, சுதனாகியசருவேசுரன் உலகத்தாரின் பாவங்களுக்காகத் தம்மைத்தாமே பிராயச்சித்தபலியாக்கினார். தேவபிதாவும் மனுஷனாய்அவதரித்த திருச்சுதன்பேரிலே "நம்மெல்லாருடைய அக்கிரமங்களையும் சுமத்திவிட்டார்." அதனால், தேவசுதன் பாவத்திற்குஇயல்பான தேவஅவமான பங்கத்தையும், அவலட்சணத்தையும் சரியாய்அறிந்திருக்கிறார்.

திவ்வியமீட்பரின் திருக்குருதி ஓர் சாமானிய மனிதனின் உதிரமல்ல. நரதேவனின் அளவில்லாத விலையேறப்பெற்ற திருஇரத்தம். அதன்ஒருதுளியே இவ்வுலகின் சகலபாவங்களையும், இன்னுமே அநேகஉலகங்களின் பாவங்களையும் கழுவவல்லது. கரைகாணாத அன்பின்சமுத்திரமான யேசுக்கிறீஸ்துநாதர் — மன்னுயிரைமீட்கத் தம்முயிரைக் கொடுத்த யேசுஇரட்சகர் மனுமக்களுக்காகச் சிந்திய திருஇரத்தம் எவ்வளவு! அவர் பிறந்த எட்டாம்நாளன்று யேசு எனும் திருநாமம் சூட்டப்பட்டு, விருத்தசேதனச்சடங்கு நிறைவேறுகையில் சிந்தியதிருஇரத்தம் எவ்வளவு! திவ்வியசற்பிரசாதத்தை ஏற்படுத்திய பெரியவியாழக்கிழமை சாயந்தரம் பூங்காவனத்திலே அவரின் சர்வாங்கமும் படபடத்து, இருதயத்தின் இரத்தத்தாரைகளெல்லாம் பெருக்கெடுத்துச் சரீரமுழுவதிலும் திடீரென வியர்வையாகப் பாய்ந்தது. அவருடைய ஆசீர்வதிக்கப்பட்ட திருக்குருதி சரீரத்தின் சகல மயிர்க்கண்களாலும் பொசிந்து திருவஸ்திரத்தை நனைத்து, ஆறாய்ப் பெருகியமையால் அவர் முட்டிட்டிருந்த தரையெல்லாம் நனைந்துபோயிற்று.

அம்மம்ம! சொல்லொணா வேதனைக்கிடமாய்ப் படுகாயப்படாத அவயவம் ஒன்றாவது அவருடைய திருச்சரீரத்தில் இல்லை. உச்சிதொடங்கி உள்ளங்கால்பரியந்தம் சுகமானபாகம் இல்லை. ஒருதுளி இரத்தமாவது சிந்தாமல் மீந்திருக்கவில்லை. அத்திருஇரத்தம் பிலாத்துவின் அரண்மனை முற்றத்திலே கற்றூணடியிலும், கல்வாரிமலைக்குச்செல்லும் வழிநீளமும், கொலைக்காரருடைய ஈட்டி, சாட்டை, சவுக்குமுதலிய ஆயுதங்களிலும், சிலுவைமரத்திலும், அதன்பக்கங்களில் இருந்த கற்பாறையின்மேலும் ஏராளமாய் இறைக்கப்பட்டிருந்தது.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற தேவசெம்மறிப் புருவையானவர் கற்றூணிற்கட்டுண்டு பட்ட ஐயாயிரத்துச் சில்வான அடிகளினால் மாங்கிஷம் மாங்கிஷமாயிராமல, தசைகள் தெறித்துச் சர்வாங்கமும் ஏககாயமாய்ப் போனபொழுது அவர்சிந்தியதிருஇரத்தம கங்குகரைகாணாதது. திருச்சிரசில எழுபத்திரண்டு கூரியமுட்கள் பொருந்திய முள்முடி சூட்டப்பட்டபொழுது எழுபத்திரண்டு இரத்தத்தாரைகள் உண்டாகி, அவருடைய திருக்குருதியால் கண்கள் நிறைந்து, நாசித்துவாரங்கள் நிறைந்து இரத்தவாறாய்ப் போயிற்று.

சிலுவையிலே மரித்தபின்னரும் திவ்வியநாதரின் இருதயத்தை ஈட்டியால் ஓர்கொடியசேவகன் குத்துகிறான். தண்ணீரும், இரத்தமும் ஓடிவடிகின்றன. யேசுநாதருடைய திருஇரத்தந்தான் நாம் ஞானஸ்நானம் பெறும்வேளை எமது சென்மபாவத்தைக்கழுவி, எமதுஆத்துமத்தை இஷ்டப்பிரசாதத்தால் புனிதமாக்குகிறது. நாம் சிந்தனை, வாக்கு, கிரிகைகளால் செய்யும் அக்கிரமங்களைப் பாவசங்கீர்த்தனம்எனும் தேவதிரவிய அனுமானம் பெறும்தருணத்தில் அவருடைய விலைமதித்தற்கரிய திருஇரத்தம் கழுவுகின்றது பாவஅக்கிரமம் நிறைந்த உலகின்மேல் தேவகோபம் இறங்காதபடி யேசுநாதரின் திருக்குருதிதான் தடுக்கின்றது. ஓ, யேசுவே! தேவரீர் சிந்திய திருஇரத்தப்பலன் எல்லோர் மேலும் இரட்சணியமாரியாய் இறங்குவதாக!

—(⌒)—

## கருதினலின் அந்தியவேளை

விசுவாசப்பரப்புதற் திருச்சங்கத்தின் பதிற்தலைவராக நியமனஞ்செய்யப்பெற்று, ஐக்கிய அமெரிக்கதேச சிக்காகோநகரிலிருந்து றோமாபுரிபோய்ச் சேர்ந்ததும் சத்திரவைத்தியமூலம் தமதுகரம் துண்டிக்கப் பெற்றவரான கருதினல் ஸ்றிற்ச்ஆண்டவர் சென்ற வைகாசிமாதம் 27-ந்திகதியன்று அதிகாலை தாம்மரிப்பதற்குச் சிறிதுவேளையின்முன் அறையுண்ட திருச்சிலுவைஒன்றைத் தமது இடதுகரத்தினால் பிடித்தவண்ணம் தமது படுக்கையைச் சூழவிருந்தவர்களையெல்லாம் ஆசீர்வதித்தார். அவரது மரணப்படுக்கையருகிலே அவருடையசகோதரரின் புதல்வர்களாகிய வண. மொறிஸ் ஸ்றிற்ச்சுவாமியாரும், திரு. றூபேட் ஸ்றிற்ச் அவர்களும், குருசிரேஷ்டர்களும், மற்றும்நண்பர்களும், அவரைப்பராமரித்த கன்னியாஸ்திரிமாரும்நின்றார்கள். அவரின் மரணத்தைப் பற்றித் தமக்கு அறிவிக்கப்பட்டதும் பரிசுத்தபாப்பரசர் தமது சிற்றாலயஞ்சென்று அவரதுஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபஞ்செய்யலாயினர். அப்போதுஅவர் ஆழ்ந்த கவலைகொண்டவராய்க் காணப்பட்டதாக வத்திக்கான் அதிகாரிகள் தெரிவித்தார்கள். மரித்தபின் அவர்சரீரம் றோமாபுரியிலுள்ள வடஅமெரிக்க குருமடத்திலே வளர்த்தப்பட்டு, வைகாசிமாதம் 29-ந்திகதியன்று அர்ச். இஞ்ஞாசியாரின் கோவிலிலே அவரது ஆன்மஇளைப்பாற்றிக்காக ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லறத் தொண்டர் தேவை

— M. J. M. —

**விசுவாசத்தைப் பரப்புவதையும், நம்தேசத்தவரின் கிறிஸ்தவசீவியத்தை வளர்ப்பதையும் தங்கள்வாழ்க்கையின் இலட்சியங்களாகக்கொண்டு தொண்டாற்றும் கணக்கற்ற சாதாரணகிறிஸ்தவர்கள்—ஆடவரும் பெண்களும்—தேவைப்படுகின்றனர்.**

(மேற்றிராணியாண்டவரின் திருமுகம்)

இல்லற மிஷனரிமாரா? எங்கள் பேர்த்திக்கு அது சீனவித்தை போன்றிருந்தது. அவள் எவ்வளவோ செபம் பண்ணியும் நான் பிரிவினை மனப்போக்குக் கொண்டுவிட்டேன் என நினைப்பதை அவளுடைய முகபாவம் தெளிவுபடுத்தியது.

"பரிசுத்தபிதாவே அதைப்பற்றிக் கூறியிருக்கிறார். பாப்புமார் பலரின் கூற்று அது."

"ஆனால், அதெல்லாம் எண்ணத்துக்கு? திருச்சபையிலே குருமார், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள் மிஷன்நாடுகளிலே திருவூழியஞ் செய்கிறார்களே! எல்லாமாக 1,35,000 பேர் 6,50,00,000 கிறிஸ்துவர்களுக்காகப் பாடுபடுகிறார்கள் என ஷீன் ஆண்டவர் சொன்னாரே" என்றாள் பேர்த்தி.

எனது பேர்த்தி பத்தியுள்ள ஒரு பரிசுத்த ஆத்துமா. சகாயமாதா நோவினை தவறமாட்டார். அவர் சொன்னதெல்லாம் உண்மை. இல்லற மிஷனரிமாரைப் பற்றிக்கூறி அவளுடைய மனதைக் கலக்கிவிட்டேனே என விசனித்தேன். ஆயினும் (1) திருச்சபை வேதவிருத்தி வேலையில் எப்போதும் ஈடுபட்டிருக்க வேண்டியது; (2) அந்தவிருத்திவேலைக்காகக் கிறிஸ்துநாதர் அதில் எப்போதும் வாழ்வதுபோன்று அதுவும் உயிர்த்துடிப்புடனிருக்கிறது; (3) அதைத் தேவன் ஏற்படுத்தி, நடாத்தி வந்தாலும் உலகமாற்றங்களுக்கமைய அதுவும் தன் ஊழியமுறையை மாற்ற வேண்டும் எனக்கூறவும் ஆவல்கொண்டேன்.

யோண் கொனோர் இந்தியாவில் மூன்று ஆண்டுகளாக இல்லறத்தொண்டராய்ச் சேவைசெய்தார். ஜோண் டில்வத் (பெண்) கிழக்கு ஆபிரிக்காவில் ஆசிரியத்தொண்டாற்றுகிறார். ஜிம்மும் கிறேஸ் ரேகனும் தங்கள் இரு பிள்ளைகளுடன் தென் ஆபிரிக்க டேர்பனில் ஐரோப்பியரல்லாதோருடைய வைத்தியசாலையில் சேவைபுரிகின்றனர்.

வேதவிருத்தி நாடுகளில் திருவூழியம்புரிய இல்லறத்தாரைத் திருச்சபை தேடுகிறது. அது ஒருபுதியசேவை முறையல்ல. ஏனெனில், திருச்சபையின் ஆரம்பகாலத்தில் ரோமைச்சக்கிரவர்த்திகளின் மாளிகைகளிலும், சந்தைகளிலும், வியாபாரநிலையங்களிலும் தேசாளுமன்றச் சபையினர், அடிமைகள், பொதுமக்களிடையேயும் வேதவிருத்திச்சேவை புரிந்தவர்கள் இல்லறத்தாரே. வேதவிருத்திக்கு இல்லறத்தொண்டர் தேவையெனும் பொழுது குருமார், சந்நியாசிகளுக்குப் பதிலாக வேதப்பரப்புதற்சேவை புரிவோரைக் கருதுகிறோம் அல்ல.

## கத்தோலிக்க வாழ்க்கை மாதிரி

வேதவிருத்திச்சேவையிலே இல்லறத்தாருக்குச் சிறப்பான தொண்டு உண்டு. வேதம்பரம்பிக் கொண்டிருக்கும் இடங்களிலே புதுக்கிறிஸ்துவர்கள் காணவும் பின்பற்றவுங்கூடிய இல்லறக் கத்தோலிக்கவாழ்க்கைமுறை இல்லை. கத்தோலிக்க பழக்கவழக்கப் பாரம்பரியம் அமையக் காலம்போதியதில்லை. எனவே, இல்வாழ்வில் கத்தோலிக்க பண்பாட்டின் முன்மாதிரி காட்டுவோர் முதல் ஆவசியம். இத்தகையமாதிரி இல்லாதஇடத்தில் விசுவாசத்தைக் கைக்கொண்டு நடத்தும்வாழ்க்கை குருமார், துறவிகளுக்கேயன்றி தமக்கல்ல எனப் புதுக்கிறிஸ்துவர்கள் எண்ணநேரும். இல்லறதருமத்தைச் சமயஆடிப்படையில் நடாத்தலாம்; திவ்வியபலிப்பூசை கிறிஸ்துவவாழ்க்கையின் நடுநாயகம்; கிறிஸ்துவகொள்கைகளும் வாக்குகளும் அவனுடைய செய்கைகளிற் செறிந்திருக்கின்றன என்பதெல்லாம் புதுக்கிறிஸ்துவமக்களுக்கு அற்புதமாய்ப்படும். விசுவாசக் கொள்கைகளில்ஊறி இல்லறத்தை நடாத்திக்காட்ட குருமாரால் அல்லது சந்நியாசர்களால் முடியாது; இல்லறத்தாரால்தான் முடியும்.

## தொழில் நுட்பச்சேவை

தமது தொழில்நுட்ப அறிவைத் திருச்சபையின் சேவைக்கு அளிப்பது இல்லறத்தொண்டர்செய்யும் இரண்டாவது சேவையாகும். ஆசியா, ஆபிரிக்காவில் ஏற்படும்விரைவுற்ற சமுதாயமாற்றங்களுக்கேற்பத் திருச்சபையின் விருத்தியையும் விரைவுபடுத்துவதற்கு விவசாயம், பொறி இயல், பொதுச்சுகாதாரம், வைத்தியம், கல்வி, பிரயாண—சமாச்சார இயல், சமூகஊழியம் போன்றதுறைகளில் வல்லுனரான இல்லறக் கத்தோலிக்கரின் உதவிதேவைப்படுகிறது. அப்பிரதேசங்களில்உள்ள பலநாடுகளில் பொருளாதார, அரசியல், சமுதாய மாற்றங்கள் உள்ளாந்தரமாக ஏற்படுகின்றஇக்காலத்தில், இம்மாற்றங்களுக்கு கிறிஸ்துவ கொள்கைகளுக்கிசைந்த அமைப்புக்கொடுக்கத் தொழில்நுட்ப அறிவுபடைத்த, தேவ ஊழியப் பயிற்சியுள்ள கத்தோலிக்கர் அவசியம்.

## சுதேச முதல்வர் தேவை

அத்துடன் சுதேசத்தலைவர்களைப் பயிற்றுவதும் இல்லறத் தொண்டரின் இன்னொரு சேவையாகும். அவ்வப் பகுதிகளிலுள்ள மக்களைத் தடுத்துவிட்டு, பெரிய உத்தியோகங்களைத் தாம் பெற்று அதிகபொருளீட்டுவது இல்லறத்தொண்டரின் நோக்கமோ அன்று. தேவமகிமைக்கும், திருச்சபைவிருத்திக்குமாகத் தம்மையும், தம் சேவையையும் தத்தஞ்செய்வதே நோக்கமாகும். இல்லறத்தொண்டர் கிறிஸ்துவ வாழ்க்கையிலும், சேவையிலும் தமது அனுபவத்தையும், அப்பிரதேசத்துக்குரிய சிறப்பான சிக்கல்களையும் பொருத்திப்பார்ப்பர். சுதேசமக்களின் மனப்போக்கு, மொழி, ஆவல், தேவைகளையும் அறிவர். அவைஎல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து, ஒப்புநோக்கவேண்டும். நோக்கி, அவ்வப் பிரதேசங்களின் தேவைகட்கேற்ற பயிற்சிபெறவேண்டும். தனிமக்களை மனந்திருப்புவதிலும், சங்கங்கள், குழுக்களைக் கிறிஸ்துவ பண்பாட்டுடன் அமைந்திருக்கச் செய்வதிலும், தம் அனுபவத்தை உபயோகிக்கவேண்டும்.

## அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாநகரசபை

**சோலைவரிவசூலிப்பவர்—2-ம்வட்டாரம்**

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் 1958-ஆம் ஆண்டு ஆனிமாதம் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிவரை கீழே கையொப்பமிட்டுள்ளவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள், யாழ்ப்பாணம், மாநகரசபை கணக்காளரிடமிருந்து பெறப்படும் மாதிரிப்பத்திரங்களிலேயே அனுப்பப்படவேண்டும்.

கட்சன் செல்வராசா,
மாநகரசபை கொமிஷனர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
18-6-58.

பொஇ.

---

இல்லறக்கிறீஸ்துவர்கள் திருச்சபையில் தமக்குரிய இடமென்ன? தமது தேசமக்களை மனந்திருப்புவதில் தமக்குரிய தனிப்பொறுப்புஎன்ன? தமது சமூகத்தையும், கலாச்சாரத்தையும் கிறிஸ்துமயமாக்குவதில் என்னதுணை செய்யலாம்? என்பனவற்றைச் சுதேச இல்லறக்கிறிஸ்துவர்உய்த்துணரச்செய்வர் இல்லறத்தொண்டர். இக்கைங்கரியங்கள் இல்லறக் கிறீஸ்துவர்களாலேயே முடியும்.

## அமையவேண்டிய சிறப்புகள்

வயது: தமதுசூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு இயைய நன்கு நடந்துகொள்ளக்கூடிய இளம் ஆண் பெண்பாலார் தேவை.

சுகாதாரம்: நடுத்தரத்திற்கு மேற்பட்ட சுகமும், தேகவலிமையும், தளராதஊக்கமும் உள்ளவர்கள்.

கல்வி: மிஷனரிநாடுகளில் பெரிதும் வேண்டப்படும் தொழில்நுட்ப அறிவு.

ஞானஇயக்கம்: திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவிசெய்ய மனம் நிறைந்த உறுதியான ஆவல்.

தனித்தவரும், தம்பதிகளும இல்லறத்தொண்டர்ஆகலாம். ஏனெனில், அவர்கள் சந்நியாசசபைகளிற் சேருவதுமில்லை, சந்நியாசிகள் போன்று வாக்குத்தத்தம் செய்வதுமில்லை. இல்லறத்தொண்டர் தாமசெய்யும் தொழிலாலேயே தம் தாபரிப்பைத் தேடுகின்றனர். சிலர் சொற்பகாலத்துக்கும், வேறுசிலர் ஆயுள் காலமுழுவதிற்கும் தொண்டராய்ச் சேவைபுரியலாம்.

## பயிற்சி அவசியம்

அவர்கள் கல்விபறிவிலும், ஞானச்சீவியத்திலும் விசேடபயிற்சி பெறுவது அத்தியாவசியம். அன்றேல், அவர்களதுதொண்டு பலனதராது. எழும் சிக்கல்களைத் தீர்த்துவைக்க அறியாமற்போவர். ஆத்துமவாஞ்சையும், ஆவலும மாத்திரமிருந்தாற் போதாது. சிலகாலப் பயிற்சியும் தேவை.

குருமார், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிமாராகாமல் திருச்சபைக்குத் தொண்டுபுரிய ஆவலுள்ள அநேகஇளம் ஆண்களும், பெண்களும் எம்மத்தியில் இல்லாமற்போகார். இல்லறத்தாரும் வேதவிருத்தித்தொண்டு செய்யலாம் என அவர்கள் எண்ணவில்லையாக்கும். அவர்கள் அவ்வப்பகுதி மேற்றிராணியாரின் அதிகாரத்தின்கீழ் பயிற்சி பெற்று, பின் சேவையை ஆரம்பிக்கலாம்.

தேவை உடனடியானது. கத்தோலிக்க இல்லறத்தொண்டர் தம்தேசத்தில் திருச்சபையைவளர்ப்பதில் உரிய சேவைபுரிய முனையாவிடில் அவர்களிடத்தைப் பிறர் கைப்பற்றுவர். கைப்பற்றுபவர் கத்தோலிக்க சமய விரோதிகளாயின் எம்மக்களது கதி என்ன?

## மருதமடுத்திருப்பதி
### ஆடிப்பெரிய திருநாள்

தற்போதைய கஷ்டங்களைமுன்னிட்டு மருதமடுத்திருப்பதி ஆடிப் பெரியதிருநாள் (ஆனி 23—ஆடி 2) பின்போடப்பட்டிருக்கிறது. நோவனைகளின் ஆரம்பதிகதி பின்னர்அறிவிக்கப்படும்.

மருதமடுத்திருப்பதிப் பரிபாலனர்

---

## சின்னமடு
### ஆடித் திருநாள்

சின்னமடுப்பதியிலே பரிசுத்த செபமாலைமாதாவின் திருநாள் ஆடிமாதம் 1-ந்தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4-30மணிக்கு மாலைஆராதனையோடு ஆரம்பமாகி, 2-ந்தேதி புதன்கிழமை காலை 7 மணிப் பாடற்பூசையோடு முடிவாகும்.

திருப்பதியிலே யாத்திரிகர்களுக்கு வேண்டிய வசதிகளெல்லாம் கவனிக்கப்படும்.

கட்டளைக்குரவர்,
நாரந்தனை.

---

## Order Nisi declaring will proved

IN THE DISTRICT COURT OF JAFFNA
Testamentary Jurisdiction } No. 469.

In the matter of the last will and testament of the late Mary Tiruchelvam, widow of Emmanuel Tiruchelvam of 4th Cross Street, Jaffna.
Deceased.

Anton Ratnam Joseph of 4th Cross Street, Jaffna.
Petitioner.

Vs.

1. Isabella wife of Anton Ratnam Joseph of 4th Cross Street, Jaffna.
2. P. Saverimuttu of do
3. Alfred Swampillai of do
4. Mrs. R. J. Paul of 'Airy Dale', Beach Road, Jaffna.
5. Mrs. Malar Alphonsus of 53, 4th Cross Street, Jaffna.
6. A. F. Alphonsus, P. W. D. Office, Puttalam.
7. A. W. Joseph, c/o A. F. Alphonsus, P. W. D. Office, Puttalam.
8. Mrs Emmanuel Joseph c/o Mrs. M. Alphonsus, 55, 4th Cross Street, Jaffna.
9. Mrs, Robert Nevins of 3rd Cross Street, Jaffna.
10. Robert Nevins of do.
11. Mrs. R. Bastiampillai, c/o B. Bastiampillai, P. W. D. Office, Puttalam.
12. Mrs. A. J. Nicholas, c/o A. J. Nicholas, Retired Teacher, Karampan, Kayts.
13. A. J. Nicholas, Retired Teacher, Karampan, Kayts.
14. Mrs, Ranee Nevins, and
15. A. G. Nevins. Irrigation Department, Mawiletchiya, Anuradhapura.

Respondents.

This matter coming on for disposal before N. Sivagnanasundaram, Esquire, Acting District Judge, Jaffna, on the 30th day of May 1958, in the presence of Mr. A. Arulambalam, Proctor on the part of the Petitioner and the affidavits of the Pettioner and the attesting Notary and witnesses dated 28th May 1958 having been read: It is ordered that the last will and testament of the deceased Mary Tiruchelvam widow of Emmanuel Tiruchelvam dated 28th Oct. 1957 attested by A Arulambalam, Notary Public and numbered 638 be and the same is hereby declared proved and the Petitioner be entitled to have Probate of the same issued to him accordingly unless the Respondents or others shall on or before the 14th day of July 1958 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 30th day of May 1958.

**Sgd. P. Sri Skanda Rajah,**
District Judge.

Drawn by
A. Arulambalam,
Proctor for Petitioner.

---

● நம்திவ்வியகர்த்தர் சிலுவையில் அறையுண்டு மரணித்தகுன்று கல்வாரி என்று அழைக்கப்படுகிறது. இது "கல்வாரியா" (கபாலம் — மண்டை ஓடு) எனும் லத்தீன்மொழியிலிருந்து பிறக்கலாயிற்று. கபால உருவமாய் அக்குன்று அமைந்திருப்பதாலே கல்வாரியென அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்ஸ் பிலோமினா

(முன்தொடர்ச்சி)

நிற்க, காலச்சக்கரம் சுழன்றோடிக் கொண்டிருந்தது. ஆஸ்பத்திரியில் இச்சம்பவம்நிகழ்ந்து மூன்றுமாசங்கள் ஆகிவிட்டன. எல்லாம் மறக்கப்பட்ட ஓர்சம்பவமாயிற்று. அங்ஙனமாக, ஓர் நாள் பிற்பகல் 1மணியிருக்கும். லண்டன்நகரின் சுற்றுடலிலுள்ள கோவில் ஒன்றிலே நேர்ஸ்பிலோமினா முழந்தாளிட்டுச் செபம்பண்ணிக்கொண்டிருக்கிறாள். அவள் இப்போது சமீபமான கந்தோர்ஒன்றிலே வேலைபார்த்துவருகின்றாள். மத்தியானப்போசனத்துக்கென்று கொடுபடும் ஒருமணிநேரத்திலே சிலநிமிஷம் செபம்பண்ணுவதற்காக அவள்தினமும் கோவிலுக்குச் செல்லுகின்றாள். அன்றும்வழமைபோலச் செபம்பண்ணும்போது துக்ககோலமான உடைதரித்திருந்த நடுத்தரவயசுடைய ஓர்சீமாட்டியும் அக்கோவிலுள் பிரவேசித்து அவளுக்குச் சற்றுமுன்பாக ஓர்பெருமூச்சுடன் முழந்தாட்படியிட்டுத் தனதுகைப்பையிலிருந்து வெளியேஎடுத்த ஓர் பொருள் திடீரென்று நேர்ஸ்பிலோமினாவின் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்துகொள்ளலாயிற்று. அம்மட்டா! மிகுந்தஆச்சரியத்தையும் அவளுக்கு உண்டுபண்ணிற்று. என்றாலும், அவள்தன்மனதை அடக்கிக்கொண்டு வெகுஅமைதியாகச் செபம்பண்ணினாள்.

சிலநிமிஷங்கள் சென்றன. அந்தச் சீமாட்டி தனதுசெபத்தை முடித்துக் கொண்டு எழுந்து கோவிலைவிட்டு வெளியேசென்றாள். அப்போது நேர்ஸ் பிலோமினாவும் அவளைப்பின்தொடர்ந்து வெளியேசென்று கனிவானகுரலில் "அம்மா! தயவுசெய்து என்னைமன்னிக்கவேண்டும்; நான்தங்களிடம் ஓர் காரியத்தைப்பற்றிக் கேட்க ஆசிக்கிறேன்" என்றாள்.

இதைக்கேட்டதே அந்தச்சீமாட்டி அவள்பக்கமாகத் திரும்பினாள். தனது வதனத்திலே பெரிதும் அமைதிவிளங்க, புன்னகைததும்ப அவளைநோக்கி: "நல்லது, என்னகாரியம்கேட்க ஆசிக்கின்றாய்" என்றாள்.

"அம்மா, தாங்கள்வைத்திருக்கும் அந்தச்செபமாலைஇருக்... அதுநான்... செபமாலைபோல்... அழகான... கருமணிச்செபமாலை... இந்தமணிகள் போல் கிடைப்பது அருமை; இன்னும் இச்செபமாலையில் தொடுத்திருக்கும் வெள்ளிக்குருசும் அதற்குரியதல்ல. முன்னர் அதிலிருந்தகுருசை நான் இழந்துபோனேன்; அதற்குப்பதிலாக அந்தவெள்ளிக்குருசை நானே அதில் தொடுத்தேன்; அதனால் இந்தச் செபமாலையை யார் தங்களுக்குக் கொடுத்தார்என்று தயவுசெய்து தெரிவிப்பீர்களா?"

அப்போது அந்தச்சீமாட்டி மிகுந்த பிரமிப்பு அடைந்தவளாய்ச் சுற்றுமுற்றும் பார்த்துச் சிறிதுவேளை எதையோ சிந்தித்துவிட்டுப் பெரிதும் மனஅங்கலாய்ப்புடன்: "அப்படியானால் மகளே! நீதானா நேர்ஸ்பிலோமினாஎன்ற அந்தப்பெண்மணி" என்று மெதுவாகக்கேட்டாள்.

"ஆம், நான்தான் அம்மா! ஆனால், நான்இப்போது ஓர்நேர்ஸ்அல்ல; அந்தப்பதவி எனக்குத்தகுதியல்லஎனக் கண்டுணர்ந்து அதைவிட்டுவிட்டேன்; அப்படியானால்... ஆஸ்பத்திரியில் அன்று காயம்கட்டப்பட்டுக்கிடந்த அந்தவாலிபரின்தாயார் ஒருவேளை நீங்கள்தானோ அம்மா?"

"ஆம், நான்தான்; அப்போது எனது செல்வமகன் பீற்றருடன் அபாயகரமான அந்தவேளை சம்பாஷித்தவள்— இந்தச்செபமாலையை அவர்கையில் கொடுத்தவள் நீதானா?" என்று தனது குரல்கம்ம ஆத்திரத்துடன் வினவியபோது, அச்சீமாட்டி மிகுந்தமனவெழுச்சியுடையவளாய்க் காணப்பட்டாள். அவள் கண்கள் இரண்டும் வெகுவாகக்கலங்கிக் கண்ணீரால்நிறைந்து போயின.

"அவர்இருந்த அந்த 'வாட்'டில் இருந்தவர்கள் எல்லாம் அவர்மிக மோசமான நிலைமையிலிருப்பதாகச் சொல்லக்கேட்டேன்; நானோ மனஞ்சலிக்காத ஒருபெண்; அதனால்நான் அப்போது செய்ததைச் செய்யத்தான் வேண்டுமெனத் தீர்மானித்து அவர் கட்டிலின் பக்கமாக விரைந்துசென்றேன்; அறிவுநினைவற்று அவர்கிடப்பதாக டக்றர் தெரிவித்தார்; ஆனால், அவர் அப்படிக் கிடக்கவில்லை; நான் சொல்வது உமக்குக் கேட்குமானால், உமது தலையை அசைத்துக்காட்டுமென்று நான்கேட்டபோது, அவரும் தலையை அசைத்துக் காட்டினார்; அவர்கரமும் செபமாலைக்குருசைப் பொத்திப்பிடித்துக் கொண்டது..."

இவ்விதம் நேர்ஸ்பிலோமினா கூறியதும் அந்தச்சீமாட்டி அன்புபெருக, உள்ளமுருக அவள்கரத்தைப்பற்றிப் பிடித்து "உன்னைப்பற்றி நினைக்கவே பெரியஆச்சரியமாய் இருக்கிறது; நீ செய்தது மெத்தச்சரி; எனது மகன் ஓர்கத்தோலிக்கன்; ஆனால், எனக்குப் பெருங்கவலை உண்டாகும்படியாகச் சிலவருடங்களின்முன் அவன் வேதத்தைக்கைநெகிழ்ந்துவிட்டான். அந்த வேளை அங்கு எதிர்பாராதவிதமாகச் சென்று அவனைமனந்திருப்பிய அந்தச் சம்மனசு நீதான் மகளே; அதோ பார், நடந்துவருகின்றான்; அவன் தான்..."

"அதோபார்; நடந்துவருகின்றான்; அவன்தான்..." என்று சீமாட்டி கூறக் கேட்டதே நேர்ஸ் அந்தப்பக்கமாக ஏறிட்டுப்பார்க்கச் சற்றுத்தூரத்திலே கெட்டையான ஓர்வாலிபர்; கம்பீரமான தோற்றமுடையவர், உல்லாச நடையிலே கோவில்வாயிலைக்கடந்து எதிரே வரக்கண்டாள். அவர்சாயலும் தான்சம்பாஷித்துக்கொண்டிருந்த சீமாட்டியின்சாயலும் ஏறக்குறைய ஒரேதன்மையாய் இருந்தன. வாடாமல்லிகைபோலும் எழில்பொருந்திய அவர்வதனத்தில் காணப்பட்ட காயத்தழும்புகள் அவருடையவதனத்தின் அழகைக் குறைப்பனவாய்அல்ல, ஆனால், மேலும்அழகுபடுத்துவனவாய் இருந்தன. அவர் சமீபமாகவந்ததும் சீமாட்டி அவரைநோக்கிச் சிறுபுன்னகைசெய்துவிட்டு, 'பீற்றர் இதுயார்? சொல் பார்ப்போம்' என்றாள்.

பீற்றர் அப்பெண்மணியைச் சற்றே குறிப்பாகப்பார்த்துவிட்டு அம்மா! யாரென்று எனக்குத் தெரியவில்லையே.

சீமாட்டி — ஒருபோதும் நீ காணவில்லை!

பீற்றர் இல்லைஅம்மா! ஒருபோதும் இல்லை.

சீமா— நீ காணவிட்டாலும், இப்பெண்மணியின் குரலையாவது சிலவேளை கேட்டிருப்பாய்!

பீற்—அப்படிக்கேட்ட ஞாபகமும் இல்லையே எனக்கு.

சீமா—இல்லை, கேட்டிருக்கிறாய். நான் சொல்லட்டுமா?

பீற்—எங்கே சொல்லுங்கள் பார்ப்போம்!

சீமா—மகனே! நீ ஆஸ்பத்திரியில் அன்று காயங்கட்டப்பட்டு அறிவுநினைவற்றவன்போல் கிடந்தபோது ஓர் நேர்ஸ்வந்து உன்னுடன் பேசியதாகவும், உனதுகையில் இந்தவெள்ளிக்குருசுச் செபமாலையை வைத்ததாகவும் சொன்னாய்அல்லவா? அப்பெண்மணி யார்தெரியுமா?

பீற்—(பெரிதும் அங்கலாய்ப்புடன்) ஆம், அம்மா! அதுதான் நேர்ஸ்பிலோமினா.

சீமா—நேர்ஸ்பிலோமினா என்று உனக்கு எப்படித் தெரியும்?

பீற்—நான் சுகப்பட்டு ஆஸ்பத்திரியைவிட்டு வெளியேறும்போது அவவின்விலாசத்தை டக்றரிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டேன். வீடுவந்து சேர்ந்ததும் அவவுக்கு ஓர்கடிதம எழுதினேன். ஆனால், அவவைப்பற்றித் தாங்கள் ஒருபோதும் கேள்விப்படவில்லையென்று அந்த விலாசத்துவீட்டுக்காரர் எனக்கு எழுதியிருந்தனர். நானும் பலமுறை அவ்விடம்போய்த் தேடியலைந்தும் அவவைக்கண்டுகொள்ளவில்லை.

சீமா—பீற்றர்! இத்தனை நாள் நீ தேடி அலைந்தும் கண்டுகொள்ளாத நேர்ஸ் பிலோமினாவை இன்று நான் கண்டுபிடித்து விட்டேன்.

பீற்— (ஆச்சரியத்துடன்) கண்டுபிடித்துவிட்டீர்களா? இது மெய்தானா அம்மா?

(வளரும்)

# சபிக்கப்பட்டவர்களே நம்மைவிட்டு......

(சி. எஸ். நாயகம் — பத்தாவத்தை, இளவாலை)

(முன்தொடர்ச்சி)

"நித்தியம்" என்றால் என்ன? நீடூழிகாலம்—ஊழியுள்ளகாலம்—சதாகாலம். அதாவது, ஓர்எல்லைபிரமாணம் அதற்குக்கிடையாது. உதாரணமாக, உலகிலுள்ள சகலவிருட்சங்களினதும் இலைகளையெல்லாம் எண்ணிக் கணக்கிட்டு, கடற்கரைகளிலுள்ள மணல்மணிகளையெல்லாம் எண்ணிக் கணக்கிட்டு, சமுத்திரமுதலாம் நீர்நிலையங்களிலுள்ள தண்ணீரைத் துளிதுளியாய் எண்ணிக்கணக்கிட்டு, வானமண்டலத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களை எண்ணிக்கணக்கிட்டு, அத்தனையோடு வேறுஎத்தனையை ஒன்றாகச் சேர்த்தாலும் நித்தியத்தின் காலஎல்லையை — கணக்கை விண்ணோராலும், மண்ணோராலும் சரிவரக்கணக்கெடுத்து, வரையறுத்துக்கூற முடியவேமுடியாது. எனவே, "நித்தியம்" என்பதற்கு மனிதபாஷையில் கணக்குமில்லை, வழக்குமில்லை, எல்லையுமில்லை, பிரமாணமுமில்லை. தேவன் அழிவின்றி நித்தியராயிருக்கிறார். நமது ஆத்துமமும், சரீரமும் நித்தியசீவியத்துக்கென அவரால் உண்டாக்கப்பட்டிருக்கின்றன.

அதனால், அவரைப்போல் நமது ஆத்துமமும், சரீரமும் நித்தியத்துக்கும் நீடித்திருக்கவேண்டிய அழிவில்லாப் பொருட்கள். ஆகவே, நமது ஆத்துமமும், சரீரமும் ஓர்நாள் இந்த அநித்தியஉலகைவிட்டு நித்தியசீவியத்தில் பிரவேசிக்கவேண்டும். இந்தநித்திய சீவியத்துக்கு இரண்டு நித்திய உறைவிடங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று, "நித்திய மோட்சம்." மற்றொன்று, "நித்தியநரகம்." நமது ஆத்துமமும், சரீரமும் ஒன்றித்தவகையிலே இவ்வுலகில் நாம்செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்கவாறு நமது மரணத்தின்போது தேவசிம்மாசனத்தின்முன் நிறுத்தப்பட்டு, ஒன்றில் மோட்சத்துக்கோ, அன்றேல் நரகத்துக்கோ தீர்வையிடப்பட்டு, அதன்படி ஆத்துமம் தனது நித்தியகதியை — இருப்பிடத்தைப் போய்ச்சேரும். அதன்மேல் உலகமுடிவிலே உத்தானத்தின்போது நமது ஆத்துமமும், சரீரமும் ஒன்றித்து, முன்னர் ஆத்துமம் பெற்றுக்கொண்ட அதே தீர்வையை மீண்டும் பகிரங்கமாகப்பெற்று, நாம்தேடிக்கொண்ட இருப்பிடமாகிய நித்திய மோட்சத்தையோ, அல்லது நித்தியநரகத்தையோ ஆன்ம சரீரத்தோடுபோய் அடையவேண்டும். ஆகவே, நமது ஆத்துமமும், சரீரமும் நித்தியத்துக்கெனச் சிருட்டிக்கப்பட்ட அழிவில்லாப்பொருள்களாகவே, அவற்றின் இருப்பிடமாகிய ஸ்தலமும் நித்தியமாயிருத்தல் வேண்டும்.

— மத். 25 : 32 – 46.

"நரகம்" என்றால் என்ன? அது பேய்பிசாசுகளின் உறைவிடம். ஏகமும் தணியாதஅக்கினியால் நிறைந்த ஓர்ஆதாளபாதாளம். பிசாசுகளுக்கும், அவற்றின் தூதர்களுக்கும், கெட்டுப்போன பாவிகளுக்குமென்று தேவகோபமுனிவால் ஆக்கப்பட்டிருக்கும் ஓர்அக்கினிச்சூளை — அக்கினிச்சமுத்திரம். பிசாசுகளும், கெட்டுப்போன ஆத்துமாக்களும் இரவுபகலாய் ஓய்வு ஒழிவில்லாது நித்தியநித்தியமாய்த் தண்டிக்கப்படும் ஓர்சிறைச்சாலை. இங்கு அவர்களெல்லாம் சமுத்திரமசசங்களைப்போல் இந்த அக்கினிச்சமுத்திரத்தில் முக்குழித்து ஐயோ, ஐயோ! என்று அலறித் துன்ப உபத்திரவங்களுடன் நீந்துவார்கள். கெட்டசீவியம் சீவித்தஒருவர் மரணித்ததும், அவரின் ஆத்துமம் இந்த நரகாக்கினியில்தான் விழும். அதன்மேல் உலகமுடிவில் உத்தானத்தின்போது அவர் சரீரம் தனதுஆத்துமத்தோடு ஒன்றித்து அதேநரகஅக்கினியில் போய்விழும். பிசாசுகளோடுபிசாசுகளாய் நித்தியத்துக்கும் உபாதிக்கப்படும். அணையாத நெருப்பின் அகோரவேதனை ஒருபக்கம். பிசாசுகளின் சித்திரவதை மறுபக்கம். அவற்றின் கோரரூபம் மற்றோர்பக்கம். அம்மம்ம! சகிக்கவியலுமா? தாங்க முடியுமா? ஓர்முறை ஓர்பிசாசின் கோரரூபத்தைக்கண்ட அர்ச். மார்க்கரீத் மரியம்மாள் ஐந்துங்கெட்டு, அறிவுங்கெட்டு மூர்ச்சித்து வீழ்ந்தாள். இன்னும் ஓர்விநாடி அக்கோரகாட்சி நீடித்திருப்பின் தான்செத்தேயிருப்பேனென்று அவள் சொல்லியிருக்கிறாள். அவ்வாறாயின் நரகவேதனையை ஒரு விநாடியல்ல, இருவிநாடியல்ல, ஊழியுள்ளகாலம்—நித்தியகாலம் எங்ஙனம் சகிக்கமுடியும்? பாத்திமாபதியிலே தேவதாயார் மூன்று பிள்ளைகளுக்கும் காண்பித்த நரககாட்சி ஒருநிமிஷம் தானுமில்லை. அதையேகண்டு அறிவு கெட்டுவீழ்ந்த லூசியா: "இக்காட்சி இன்னுமோர்விநாடி நீடித்திருந்தால் நான்செத்தேயிருப்பேன்" என்றாள். அவ்வாறாயின் நரகத்திலே பாவிகள் இக்குரூர காட்சியை நித்தியகாலம் எங்ஙனம் சகித்திருக்கமுடியும்? அன்றியும் நரகநெருப்பின் உக்கிரம் இப்பூலோக நெருப்பைப் போன்றதன்று. உலக நெருப்பை நரகநெருப்புடன் ஒப்பிட்டுப்பார்த்தால் இது ஐஸ்கட்டிக்குச் சமானமேயன்றி வேறல்ல. உலக நெருப்பு நரகநெருப்பின் நிழலுக்குச் சமானமென்று அர்ச். அகுஸ்தீனார் கூறுகின்றார். உலகநெருப்பின் ஓர் சிறுபொறி நம்மீதுவீழ்ந்தால் நாம் என்னபாடுபடுகிறோம்! நரகத்தில் ஒரு பொறியல்லவே, ஒருகால் விழுவது மாத்திரமல்லவே. பிரமாண்டமான நரகநெருப்புச்சுவாலையில் எங்குதான் ஓடினாலும், எங்குதான் தப்பியோடப் பார்த்தாலும் ஓடுமிடமெல்லாம் நெருப்பேயல்லாது வேறென்ன? பாவியானவன் உலகில் சந்தோஷத்துடன் கட்டிக்கொண்டபாவங்களுக்கெல்லாம் உதவியாயிருந்த அவனது அவயவங்கள்யாவும் உபாதிக்கப்படும். அங்கே பாவிகள் புழுக்களைப்போல் பதைத்துத்துடிக்கும் பரிதாபகாட்சி கண்கொண்டு பார்க்கக்கூடியதன்று. "அங்கே அவர்களுடைய புழுவும்சாகாது, அக்கினியும் அவியாது" என்பது கிறீஸ்துநாதரின் வாக்கு.

— மாற். 9 : 47.

ஆகவே, நாம் இந்த வேதஉண்மைகளை இந்தவேளை ஊன்றிச்சிந்திப்போமாக! தேவன் மனமிரங்கித் தந்திருக்கும சுகபலம், செல்வம், செல்வாக்கு, சந்தர்ப்பங்களும், மற்றும் உலகநன்மை

(தொடர்ச்சி 8-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட் செல்வி

# மரியன்னையின் இரகசியம்

தமிழாக்கம்: திரு. மி. சந்தியாகுஅவர்கள் (புனிதஇராயப்பர் கழகம்)

(முன் தொடர்ச்சி)

## II. மரியாள்வழியாக நமது பரிசுத்ததனம்: மரியாள் இன்றியமையாத வழி

மரியாள் யேசுவை நம்மில் உருவாக்குகிறாள். புனித அகுஸ்தீனார் மரியம்மாளைக் கடவுளுடைய உயிருள்ள அச்சு என்கிறார். உண்மையில் மரியாள் கடவுளின் அச்சே. ஏனெனில், அவளில் மட்டும் கடவுள் தெய்வத்துவத்தை எவ்விதத்திலும் இழந்துவிடாது ஓர் உண்மையான மனிதனை உற்பவித்தார். மேலும் அவளில் மட்டுமே மனிதன் யேசுக்கிறிஸ்துவின் வரங்களினால் மனித இயற்கையின் சக்திக்கேற்பக் கடவுளாக உருவாக்கப் படுகின்றான்.

ஒரு சிற்பி உயிருள்ளது போன்ற ஒரு படத்தையோ சுரூபத்தையோ செய்ய இரண்டுவகைகள் உண்டு. தனது புத்தி அறிவு பலம் அவசியமான ஆயுதங்கள் கொண்டு உருவமற்ற கடினமான ஒரு பொருளிலிருந்து ஒரு சுரூபத்தைச் செதுக்கலாம்; அல்லது ஓர் அச்சில் வார்க்கலாம். முதல் வகைக்கு நீண்டகாலம் தேவை, கடினஉழைப்பு அவசியம். மேலும் எவ்வளவோ தவறுகள் நேரிடலாம். கவனமின்றிச்செய்த ஒரேஒரு செதுக்கு—உளியின் செதுக்கு – முழுவேலையும் கெடுக்கக்கூடும். இரண்டாவதுவழியோ சுலபமானது, மிருதுவானது; அச்சு உத்தமமானதாகவும், வார்க்கப்பட்ட உருவத்தைச்சரி...க அளிக்கக் கூடுமானதாக...ம் இருப்பின் குறைந்த வேலை...ம் குறைந்த செலவுமே தேவை. ...பயோகிக்கப்படும் பொருளும் கலைஞனின் கைக்கு எவ்வித தடையை ஏற்படுத்தலும் கூடாது.

மரியாள் பரிசுத்தஆவியால் படைக்கப்பட்ட சிறந்த அச்சு. தெய்வீக இணைப்பினால் தேவ-மனிதனை உருவாக்கவும், வரப்பிரசாதத்தினால் மனிதனைக் கடவுளாக்கவும் உண்டாக்கப்பட்டாள். அந்த அச்சில் தெய்வீகத்தின் எந்தஅம்சமாகிலும் குறைபடவில்லை; யார்யார் அந்த அச்சில் வார்க்கப்படுகிறார்களோ, யார்யார் தங்களைமுற்றிலும் கையளிக்கிறார்களோ அவர்கள் எல்லோரும் மெய்யான கடவுளான யேசுக்கிறிஸ்துவின் சகலகுணங்களையும் பெறுகின்றனர். மனித பலவீனத்திற்கு தக்காப்போல், மிகுந்த அல்லலோ, உழைப்போ இன்றி, இவ்வேலை மிகமிருதுவாகச் செய்யப்படுகின்றது. மேலும், இது நிச்சயமானதும், ஏமாற்றத்திற்கு இடமில்லாததுமான வகையில் செய்யப்படுகின்றது. ஏனெனில், மரியாள் எங்கோ, அங்கு சாத்தான் ஒருபொழுதும் முன்னேறியதில்லை; முன்னேற முடியாது. கடைசியாக அவ்வேலை பரிசுத்தமாக, மாசற்றதாக, பாவத்தின் ஒரு சிறுநிழல் முதலாய் அண்டஇயலாதவாறு செய்யப்படுகிறது.

இதோ! இங்கே ஓர் ஆத்துமம். சாதாரணவழிகளை அனுசரித்து கிறிஸ்துவில் உருவாக்கப்பட்டுள்ளது. சிற்பியைப்போன்று தங்களது சுயபுத்திக் கூர்மையில் நம்பிக்கை கொண்டவர்களுடையது. மற்றோர் ஆத்துமம் மரியாளில் பரிசுத்த ஆவியால் உருவாக்கப்படத் தன்னையே வார்த்தது. தன்னுடைய புத்திக்கூர்மையில் நம்பிக்கை கொள்ளவில்லை. இஃது மிருதுவானது, உத்தம வகையில் உருவேறியது. இந்த இரண்டுவகை ஆத்துமங்களுக்கும் எவ்வளவு வித்தியாசம்! முன்னையதில் எவ்வளவு மாசு, களங்கம்! எவ்வளவு தெளிவின்மை, மனிதத்தன்மை மறைந்துள்ளது! ஆனல், பின்னையதோ பரிசுத்தமானது, பரலோக அழகுபொருந்தியது, கிறிஸ்துவை ஒத்துள்ளது.

கடவுள் தன்னில்தானே அல்லது வெளியிலோ பரிசுத்தகன்னிகையான மரியாளில் மகிமை பெறுவதுபோன்று வேறெந்தச் சிருஷ்டியிலும் மகிமை அடைவதில்லை. அவளுக்குஒத்த வேறு சிருஷ்டி இருந்ததுமில்லை, இருக்கப்போவதுமில்லை. பரலோகத்தில்உள்ள பரிசுத்தவான்களில் பத்திச்சுவாலகர்போன்றசம்மனசுகள் முதலாய் அவளுக்கு ஒப்பானவர் இல்லை. மரியாள் கடவுளின் பரலோகம்; வருணிக்க முடியாத இருப்பிடம் அங்குதான் தெய்வகுமாரன் தன்புதுமைகளை ஆற்றவந்தார், அதைக் காக்கவும் அதன்மட்டில் ஆனந்தங்கொள்ளவும்வந்தார். கடவுள் அலைந்துதிரியும் மனிதனுக்கு ஓர் உலகை உண்டாக்கினார். அதுவே நாம் வாழும் இப்பூவுலகம். அவர் தமது மகிமையில் வாழும் மனிதனுக்கு மற்றொன்றை உண்டாக்கினார். அதுதான் பரலோகம். அவர் தமக்கென ஓர் உலகைப் படைத்தார். அதையே அவர் மரியாள் என்றழைத்தார். அது மனிதர் பலருக்கு இவ்வுலகில் அறியப்படாத ஒன்று; பரலோகத்தில் வாழும் சம்மனசுகளும் பரிசுத்தவான்களும் உணர்ந்துகொள்ள முடியாத ஒன்று. கடவுள் தன் உலகான மரியாளில் மறைந்து வாழ்வதையும் தங்களில் எல்லோரையும்விட மரியாளில் மகிமையடைவதையுங்கண்டு பிரமிப்புக்கொள்ளுகின்றனர். எனவே, இடைவிடாது "பரிசுத்தர்! பரிசுத்தர்! பரிசுத்தர்!" எனவாழ்த்தி வணங்குகின்றனர்.

மரியாளை அறிந்துகொள்வதற்காக எந்தஆத்துமத்திற்கு மரியாளின் இரகசியத்தை அறிவிக்கிறாரோ, உள்நுழையும்படி எதற்குமூடப்பட்ட தோட்டத்தைத் திறந்து விடுகிறாரோ, உயிருள்ள வரப்பிரசாத தண்ணீரை இழுத்து அதைக் குடிக்கும் வண்ணம் எந்தஆத்துமத்திற்கு முத்திரையிட்ட ஊற்றை அண்டிச்செல்ல அனுமதி அளிக்கிறாரோ அவ்வாத்தும் உண்மையாகவே ஆயிரமாயிரமடங்கு பேறுபெற்றது! அவ்வாத்துமம் கடவுளை அவரது அன்பிற்குரிய படைப்பில் மட்டும் காணும். கடவுள் அளவறுக்கமுடியாத வகையில் பரிசுத்தமானவராகவும், மகிமையுள்ளவராகவும் இருப்பதையும், எனினும் அதே சமயத்தில் தனது பலவீனத்திற்கு ஏற்றவாறு தன்னையே மாற்றி அமைத்துக்கொள்வதையும் அவ்வாத்துமம் காணும் கடவுள் எங்கும் பிரசன்னமாக இருக்கிறார். அவரை எங்கு வேண்டுமானலும், நரகத்திலும் கூடக்காணலாம். ஆனல், மரியாளிலன்றி வேறெங்கும் அவர் சிருஷ்டிகளுக்கு அவ்வளவு அருகில் இருப்பதை, நமது பலவீனத்திற்குஏற்பத் தன்னையேமாற்றி அமைத்துக்கொள்வதை நாம் காணஇயலாது. காரணம் அவர் அதற்கென்றே மரியாளில் வந்து உதித்தார். மற்றெல்லா இடங்களிலும் அவர் பலவான்களுடைய போசனம்; சம்மனசுகளின் விருந்து. ஆனல், மரியாளில் அவர் குழந்தைகளின் அப்பம்.

எனவே, தவறான கொள்கையால் தவறிப்போன சிலர் கூறுவதுபோல் மரியாள் சிருஷ்டிப்புப் பொருளாக இருப்பதால் சிருஷ்டிகரோடு நாம் ஒன்றிப்பதற்குத் தடையாக இருக்கிறாள் என எண்ணவேண்டாம். இனி வாழ்வது மரியாளல்ல, யேசுக்கிறிஸ்துவே. கடவுளே மரியாளில் வாழ்கிறார். அவள் கடவுளாக அடைந்த மறுரூபத்திற்கும் புனித சின்னப்பர், மற்றுமுள்ள அர்ச்சியசிஷ்டவர்களின் மறுரூபத்திற்கும் உள்ள வேறுபாடு விண்ணுக்கும் மண்ணுக்கும் உள்ள வேறுபாட்டிலும் மிக்கது. மரியாள் கடவுளுக்கென உண்டாக்கப்பட்டவள். எனவே, எந்த ஆத்துமத்தையும் தன்னில் தடுத்து நிறுத்துவதில்லை. மாறாக அவ்வாத்துமத்தைக் கடவுளில் வார்த்து அதை அவரோடு ஒன்றிக்கிறாள். அதுவும் எவ்வளவுக்கு மரியாளோடு ஒன்றித்திருக்கிறதோ அவ்வளவுக்குக்கடவுளோடு ஒன்றிக்கிறது மரியாள் கடவுளுடைய ஆச்சரியத்திற்குரியஎதிரொலி. நாம் "மரியாள்" என்றழைக்கும்போது, அவள் "கடவுள்"எனப்பதிலிறுக்கிறாள். புனித எலிசபெத்தம்மாளோடு அவளை "பேறுபெற்றவள்"எனப் புகழும்போது அவள் கடவுளை மகிமைப்படுத்துகிறாள். பசாசினால் பரிதாபகரமாக ஏய்க்கப்பட்டுத் தவறிப்போனவர்கள் செபத்திலாவது மரியாளைக் காணவும், மரியாள் வாயிலாக யேசுவையும், யேசுவின் வழியாகப்பிதாவையும்காண அறிந்திருப்பார்களானல் அத்தகைய பயங்கர கொள்கைகளுக்குப் பலியாகியிரார்கள். மரியாளையும், மரியாள் வாயிலாக யேசுவையும், யேசுவின்வழியாகப் பிதாவையும் நாம் கண்டடைந்தால் நாம் எல்லாவற்றையும் அடைந்துவிட்டதாகப் புனிதர்கள்புகழுகின்றனர். 'எல்லாவற்றையும், என்று கூறுபவர் எதையும் விதிவிலக்காக வைப்பதில்லை. சகலவரப்பிரசாதங்கள், கடவுளோடு முழுசிநேகம், கடவுளின்விரோதிகளிடமிருந்துமுழுப் பாதுகாப்பு, எல்லாத்தப்பிதங்களையும் நசுக்கிஎறிய முழுஉண்மை, இரட்சணிய வழியில் ஏற்படும்சங்கடங்களைமேற்கொள்ளப் போதுமானபலம், கசப்பான வாழ்க்கையின் மத்தியில் முழுமன அமைதி, மகிழ்ச்சி என்பன.

நாம் சிலுவைகளைச் சுமந்து செல்ல வரப்பிரசாதங்களை அவர்கள் அளிக்கிறார்கள். மரியாளை உண்மைப்பக்தி வாயிலாகக் கண்டடைந்தவன் சிலுவைகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் விடுதலை பெறுவான் என்பது இதன் பொருளன்று. மாறாக மற்றவர்களைவிட அவனுக்கு மிகுந்த துன்பங்களும சிலுவைகளும்வரும். ஏனெனில், சீவியர்களின் தாயான மரியாள் சீவியத்தருவாகிய யேசுவின் சிலுவையிலிருந்து தனது மக்கள் ஒவ்வொருவருக்கும் ஒருபங்கு அளிக்கிறாள். ஆனல், சிலுவைகளோடுகூட அவற்றைப் பொறுமையோடும் மனமகிழ்ச்சியோடும் சுமந்துசெல்லுமாறு வரப்பிரசாதங்களையும்வழங்குகிறாள். அவ்விதமாகத் தனக்குச் சொந்தமானவர்களின் தோள்மேல் சுமத்தும் சிலுவை துன்பமாயிருப்பதற்குப் பதில் ஆனந்தத்தை அளிக்கின்றது. சில சமயங்களில் அவளது மக்கள் பாத்திரத்தின் கசப்பை உணர்வார்களானல் — ஆண்டவரின் அன்பனாக இருக்க ஒவ்வொருவரும் அப்பானத்தை அருந்தியாக வேண்டும் — இந்த அன்புத்தாய் சோதனைக்குப் பின் அனுப்பும் ஆறுதலும், ஆனந்தமும் அம்மக்களை இன்னும் கடினமானதும் துன்பமானதுமான சிலுவைகளைச்சுமக்க அளவற்ற விதமாய் ஊக்குகின்றன.

நாம் எல்லா வரப்பிரசாதங்களையும்அடைய மிகப்பரிசுத்த கன்னிகையான மரியம்மாளை உண்மையாகவே கண்டடைய வேண்டும். அதுவே கடினமானது. கடவுள்தான் ஏகஎசமானாக இருக்கின்றபடியால் மரியாள் வாயிலாகஅளிக்கும் எல்லாவற்றையும் தானேநேராகஅளிக்கக்கூடும். சிலசமயங்களில் அவ்விதமே அவர் செய்கிறார் என்பது உண்மை. எனினும், புனித அக்குயினஸ் தோமையார் கூறுவதுபோல் தெய்வீக ஞானத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் வரையறுக்கப்பட்டுள்ள வரப்பிரசாத ரீதியில் சாதாரணமாகக் கடவுள் மனிதர்களுக்குத் தன்னை அளிப்பது மரியாள் வாயிலாகமட்டுமே. எனவே, அவரிடம் போக; அவரோடு ஒன்றித்திருக்க விரும்பினால் அவர் நம்மிடை இறங்கிவர, மனித உருவெடுக்க, நமக்கு அவரது அருட்கொடைகளை அளிக்கப்பயன்படுத்திய அதே வழிகளை நாமும் கையாளவேண்டும். அவ்வழி நமது பரிசுத்தஅன்னைபால் நமக்குள்ள உண்மையான பக்தியேஆகும்.

(வளரும்)

## சபிக்கப் பட்டவர்களே ........

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

களும், தேவதிரவிய அநுமானங்களும் நமது ஆன்ம இரட்சணியத்திற்காகவே. எத்தனையோபேர் இவற்றைக்கொண்டு ஈடேற்றசிந்தையின்றி உலகமே சதமென நினைத்துப் பாவவாழ்க்கைநடத்துகிறார்கள். அதனால் இவர்கள் பொதுத்தீர்வையின்போது "சபிக்கப்பட்டவர்களே! நம்மைவிட்டகன்று நித்திய நரகாக்கினையில் போய்விழுங்கள்!" என்று நீதிபரர் கோடையிடிபோல் வசனிக்கும் சாபமொழிக்குத் தப்பிக்கொள்வது எங்ஙனம்?

(தொடரும்)

## குருடன் சலோ

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

னிடமிருந்து வாதிருப்பின் எப்படி இவ்வியக்கத்தகும் அதிசயத்தைச் செய்யக்கூடும்? உங்களுக்கு அவர் எங்கிருந்து வந்தாரென்பது தெரியாதது ஓர்ஆச்சரியம்! சந்தேகமற ஓர் அதிசயம்! ..."

"போதும் உன்பொழிவு. நீ பாவி. எங்களுக்குப் போதிக்கிறாயா?"

சலோ அவர்கள் வேதத்தினின்று புறம்பாக்கப்பட்டான், உண்மையைப் பேசிய காரணத்தால்......

சிந்தித்துக்கொண்டிருந்த சலோ யாரோவரும் காலடிச்சத்தம்கேட்டுத் திரும்பினான். அங்கே கிறீஸ்துநின்றுகொண்டிருந்தார். தனக்கு ஒளிதந்த அவரைக்கண்டதும், சலோவின்வதனம் பிரகாசித்தது.

அவன் புறம்பாக்கப்பட்டதைக் கிறீஸ்துஅறிவார் அவர் அவனிடம் பேசினார். "நீ சர்வேசுரனுடைய சுதன்பேரில் விசுவாசமாக இருக்கிறாயா?"

"யார்அவர்?" சலோ ஆவலோடு வினவினான்.

"நீ பார்த்திருக்கிறாய்; உன்னோடு பேசுகிறவர் அவரே!"

இச்சொற்கள் சலோவை உலுக்கிவிட்டன. இப்போது அவன் கிறீஸ்துவின் கமலபாதங்களில் விழுந்துகிடக்கிறான்.

'விசுவசிக்கிறேன்' என்ற அவன்வார்த்தைகள் அந்தஇடத்திலே எதிரொலித்துக்கொண்டிருந்தன.

இக்காட்சியைக்காண விரும்புவதுபோல் தடாகத்திலுள்ள கயல்கள் துள்ளி வீழ்ந்துகொண்டிருந்தன.

ஆம், சலோ இப்பொழுது உண்மை ஒளியை — அதாவது கிறீஸ்துவைக் காண்கின்றான்.

—வே. க. குரலொளி

## நன்றியறிந்த தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவிடம் நான் கேட்டுக்கொண்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

ஏழாலை க. அ.

## தூயஆவியானவர் பூசை

யாழ்நகர், பரிசுத்தஅடைக்கலநாயகி ஆலயத்திலே சென்ற 25-5-58 ஞாயிறுவாரம் ஆலயமணிகள் ஆர்ப்பரித்தன. ஆங்காங்குள்ள அரசாங்கஉத்தியோகஸ்தர்கள், ஆலயவிசாரணைப்பங்கைச்சேர்ந்த கிறீஸ்துவர்கள் ஆதவனைக்கண்ட செந்தாமரைமலர்போல் ஆனந்தத்துடன் ஆலய முன்றிலில் அணிவகுத்துநிற்க, ஆசிரியர்களும், கன்னிகாஸ்திரிமாரும், பாடசாலைச் சிறுவர், சிறுமிகளோடு ஆலயவளவில் தேங்கியிருந்தார்கள். திவ்வியபூசை நிறைவேற்றவரும் குரவர்அவர்களின் வரவைஎதிர்பார்த்திருந்த ஆலயகடிகாரம் 7 மணி காட்டி நாதகீதஞ்செய்ததும் வண. பி. தியோப்பிள்ளைசுவாமியவர்கள் மோட்டார்ரதாரூடராய் ஆலயவாயிலைஅடைந்தார். அவருக்கு நல்வரவுகூறுவனபோல் ஆலயமணிகள் ஆர்ப்பரித்தன. கிறீஸ்துவர்கள் அனைவரும் அணிவகுத்து முன்னேசெல்லக் குரவர்அவர்கள் வண. கட்டளைக்குரவர்சகிதமாய் ஆலயபீடத்துக்கு அழைத்துச்செல்லப்பெற்றார். சித்திரக் கொத்துவேலைப்பாடு அமைந்து, பன்னிறப்புஷ்பங்களால் உள்ளும்புறமும் அலங்கரிக்கப்பட்டிருந்த ஆலயம் தேசோமயமாய்விளங்கியது.

அப்பால், பாடகர்குழாம் பாட்டிசைக்கக் குரவர்அவர்களால் பாடற்பூசைநிறைவேறியது. அத்தருணம் தூயஆவியானவரின் அருட்பிரசாதங்களையும், அவர்திருச்சபைக்கு உறுதியான மனோதைரியத்தைக் கொடுத்து அதனை ஆண்டுநடத்தும் வல்லமையையும்பற்றித் திவ்வியபூசை நிறைவேற்றிய குருப்பிரசாதியவர்கள் சர்க்கரைப் பந்தரில் தேமாரிபொழிந்தவாறாய் ஓர் பிரசங்கமாரி பொழிந்தார். அதிகமானோர் தெய்வீகவிருந்தருந்தித் தூய ஆவியானவரின் ஆசீர்வாதத்தை அனைவரும் இரந்துநின்றனர்.

பூசைமுடிந்ததும் பாடசாலைமண்டபத்திலே வாசிகசாலைக்குழுவின்சார்பாகக் காலங்கண்ட வழக்கறிஞர் திரு. அல்பிறெட் சுவாம்பிள்ளை அவர்கள் தலைமையில் ஓர்பகிரங்க வரவேற்பு விழா சிற்றுண்டிஉபசரணையுடன்சிறப்பாய் நடந்தேறியது.

செவாலியர் சென்ஜோண் புவிராஜசிங்கஅவர்கள்எழுந்து இக்கால உலகம் வாலிபரைக் கம்யூனிஸ்த கும்மாளங்களிற் சிக்கவைக்கும் மாயஉலகம்; ஆதலால், யாவரும் விழிப்பாயிருந்து தூயஆவியானவரின் வல்லமையைத் துணைக்கொண்டு போராடினால் தப்பிக்கொள்ளலாமென்று நற்புத்திகூறிநின்றார்.

அப்பால், யாழ்நகர உதவித்தலதாபன அதிபர் திரு. ஏ. ஏ. யோசெவ் அவர்கள் எழுந்துபேசியபோது: இக்காலம் பெற்றார் தம்மக்களை இளவயதிலிருந்தே விவசாயம், வியாபாரம் முதலிய கல்வித்துறைகளில் முன்னேறவிடாது தடுத்துப் பிள்ளைகளின் நாட்டத்தை அடக்கியொடுக்கி உத்தியோகப்பொம்மைகளாக்கும் உதவாதகல்வியை அவர்களுக்குப் போதித்துவருகிறார்கள்; அதனால், வருங்காலத்தில் அப்பிள்ளைகளின் வாழ்க்கைமுறை பழுதடைந்து, அவர்கள் தமக்கும், கத்தோலிக்கஉலகத்துக்கும் உதவாதநாஸ்திகராய், துன்மார்க்கராய்ப் போகிறார்கள்; அவ்விதஆபத்திலிருந்து வருங்காலசிங்கங்களைத் தப்பவைக்க அவரவர்களின் நாட்டத்துக்கிசையத் தொழிற்கல்வியுடன், சமயகல்வியும் இணைபிரியாத் தோழர்போல் ஊட்டப்படவேண்டுமென வற்புறுத்தினார்.

ஈற்றில், பிரஸ்தாப வாசிகக்குழுவின் வச்சிரத்தூணாகவிளங்கும் திரு. எஸ் எம். ஜே. லூயிஸ்அவர்கள் எழுந்து, குறித்த வாசிகசாலைக்குழு தனது 3-ம் ஆண்டு நிறைவுவிழாவை முந்திய வருடங்களிலும்பார்க்கச் சிறப்பாய்க் கொண்டாடியது ஈண்டு குறிப்பிடத்தக்கவிஷயமெனக்கூறி, அதனைத் தூண்டுகோலாய்நின்று நடத்திவரும் வண. கட்டளைக்குரவருக்கும், வாசிக குழுவுக்கும் நன்றி தெரிவித்துநின்றார். இவ்விழாவைப் பரிமளிப்பாய் நடத்திமுடிக்கச் சமுகந்தந்த உத்தியோகஸ்தருக்கும், பேச்சாளருக்கும் நன்றித்துதிகூறியதுடன் யாவும்இனிதே முடிவெய்தியது.

A. S.


# Educational (Girls Only)

For Commercial Certificate and Shorthand Typists Examinations contact

M. M. Thuraisingham.

20, Third Cross Street,
Jaffna.

உலகிலே உன்னத ஸ்தானத்தில் திகழும்

எறஸ் றேடியோ

ஒன்றை வாங்கித் திருப்தியடையுங்கள்!

ஏனெனில், அது முற்றிலும் புதுமையானது. ஒவ்வொரு 'எறஸ்' றேடியோவும் திறமையான சேவையாளரால் உருவாக்கப்பட்டது. அதன் நீண்டகால சேவையே அதன் வெற்றிக்கு ஆதாரம்.

இதன் விசேஷ அம்சங்கள்:

- கவர்ச்சிகரமான தோற்றம்
- இனிமையான சத்தம்
- உறுதியான அமைப்பு
- டச் தயாரிப்பு

விற்பனையாகும் றேடியோக்கள் யாவும் உத்தரவாதம் உடையன.

உங்கள் றேடியோப் பிரச்சினை எதுவாயிருப்பினும் றேடியோத் துறையில் பலவருடகால அனுபவம் வாய்ந்தவரான திரு. எஸ். ஜே. மனுவல்பிள்ளை அவர்களுடன் கலந்துகொள்ளுங்கள்.

விற்பனையாளர்:

எஸ். ஜே. மனுவல்பிள்ளை,
றேடியோ சேல் அன் சேர்விஸ்
6, மருதடிறோட், சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

## MODERN SCHOOL OF NEEDLECRAFT & HANDICRAFT

விஞ்ஞானமுறையில் உடுப்புத்தயாரித்தல்
தையல் யந்திரத்தில் பூப்போடல் மற்றும்பல கைவேலைகள்
வகுப்புகள் ஆடிமாதம் 1-ந்தேதி ஆரம்பமாகும்.
மற்றும் விபரங்களுக்குப் பின்வரும் விலாசத்திற்கு எழுதவும்

A. J. சவிரிமுத்து,
57, 4-ம குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1566

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

கரையூர் தற்காலம் கொழும்பு
1. ஜி. கே. ஏபிரகாமும்,
2. பெண் மெற்றில்டாவம்
— வழக்காளிகள்.

எதிராக

கரையூர்
1. செபஸ்ரி யோசேப்பும்,
2. பெண் சேயம்மாவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1566-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1958-ம் ஆண்டு ஆடிமாதம் 26-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-30மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 6,838-34-உம், இன்னும்அதற்கு 30-3-57 தொடக்கம், 25-7-57 வரைக்கும் 100-க்குப் 12%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 5%வட்டியும், கோட்டுச்செலவு 291ரூபா 50சதமும்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோயிற்பற்று, கரையூர்இறை தேவரீர்குளத்து வளவு. ப. நி. 3 குளி 14-உம், வீடும், மற்றும் செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — பிரான்சிஸ்பிள்ளை சீமாம்பிள்ளைக்கும். பெண் ஞானம்மாவிற்கும் உரியஆதனம். வடக்கு — ஜே. சி. ஜெகராஜசிங்கியினதும், பெண்சாதியினதும் ஆதனம். மேற்கு — இரத்தினசிங்கத்தினதும், மறுபேரினதும் ஆதனம். தெற்கு — ஆஸ்பத்திரி, கச்சேரிறோட். இதடங்கலும் இதற்குச்சேர்ந்தவைகளும்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனரும், மதிப்பாளரும்.

24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம். 23-6-58

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 28-ம்தேதி சனிவாரம் பிற்பகல் 4 மணிக்கு அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். அவ்வமயம் 5 பேர்கள் தமது நவாப்பியாசகாலத்தைத் தொடக்குவார்கள். இம்முறை பகுதித்தலைவர் சங்கம் நடைபெறாது.

A. S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 26-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org